# سُورَةُ الْأَعْرَافِ مَكِّيَّةٌ وَهِيَ مِائَتَانِ وَسِتُّ آيَاتٍ وَأَرْبَعٌ وَعِشْرُونَ رُكُوعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

الٓمّٓصٓ ۚ ﴿١﴾ كِتٰبٌ اُنْزِلَ اِلَيْكَ فَلَا يَكُنْ فِيْ صَدْرِكَ حَرَجٌ
مِّنْهُ لِتُنْذِرَ بِهٖ وَذِكْرٰى لِلْمُؤْمِنِيْنَ ﴿٢﴾ اِتَّبِعُوْا مَآ اُنْزِلَ
اِلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ وَلَا تَتَّبِعُوْا مِنْ دُوْنِهٖٓ اَوْلِيَآءَ ۗ قَلِيْلًا مَّا
تَذَكَّرُوْنَ ﴿٣﴾ وَكَمْ مِّنْ قَرْيَةٍ اَهْلَكْنٰهَا فَجَآءَهَا بَاْسُنَا بَيَاتًا
اَوْ هُمْ قَآئِلُوْنَ ﴿٤﴾ فَمَا كَانَ دَعْوٰىهُمْ اِذْ جَآءَهُمْ بَاْسُنَآ اِلَّآ اَنْ
قَالُوْٓا اِنَّا كُنَّا ظٰلِمِيْنَ ﴿٥﴾ فَلَنَسْـَٔلَنَّ الَّذِيْنَ اُرْسِلَ اِلَيْهِمْ
وَلَنَسْـَٔلَنَّ الْمُرْسَلِيْنَ ﴿٦﴾ فَلَنَقُصَّنَّ عَلَيْهِمْ بِعِلْمٍ وَّمَا كُنَّا
غَآئِبِيْنَ ﴿٧﴾ وَالْوَزْنُ يَوْمَئِذِ الْحَقُّ ۚ فَمَنْ ثَقُلَتْ مَوَازِيْنُهٗ
فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿٨﴾ وَمَنْ خَفَّتْ مَوَازِيْنُهٗ فَاُولٰٓئِكَ
الَّذِيْنَ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ بِمَا كَانُوْا بِاٰيٰتِنَا يَظْلِمُوْنَ ﴿٩﴾ وَلَقَدْ
مَكَّنّٰكُمْ فِي الْاَرْضِ وَجَعَلْنَا لَكُمْ فِيْهَا مَعَايِشَ ۗ قَلِيْلًا مَّا
تَشْكُرُوْنَ ﴿١٠﴾ وَلَقَدْ خَلَقْنٰكُمْ ثُمَّ صَوَّرْنٰكُمْ ثُمَّ قُلْنَا لِلْمَلٰٓئِكَةِ ع ١ ٨
اسْجُدُوْا لِاٰدَمَ ۖ فَسَجَدُوْٓا اِلَّآ اِبْلِيْسَ ۗ لَمْ يَكُنْ مِّنَ السّٰجِدِيْنَ ﴿١١﴾

அத்தியாயம் : 7

## அல் அஃராஃப் _ சிகரங்கள்

வசனங்கள் : 206 மக்கீ ருகூஉகள் : 24

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. அலிஃப் லாம் மீம் ஸாத்

2.(நபியே! இது)உம்மீது இறக்கப்பட்டுள்ளவேதமாகும்;இ(வ்வேதத்தைமக்களுக்கு எத்திவைப்ப)தனால் உம்முடைய நெஞ்சத்தில் யாதொரு கலக்கமும் இருக்கவேண்டாம். இதனைக் கொண்டு நீர் (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், விசுவாசங் கொண்டோருக்கு ஒரு நல்லுபதேசமாகவும்(இவ் வேதம் இறக்கி வைக்கப்பட்டுள்ளது)

3. (மனிதர்களே!) உங்களுக்காக உங்கள் இரட்சகனிடமிருந்து இறக்கிவைக்கப்பட்ட (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்; அவனையன்றி (மற்றெவரையும் உங்களுக்கு)ப் பாதுகாவலர்(களாக ஆக்கி, அவர்) களை நீங்கள் பின்பற்றாதீர்கள்; (எனினும், இதனைக் கொண்டு) நீங்கள் மிகக் குறைவாகவே நல்லுணர்ச்சி பெறுகிறீர்கள்.

4. இன்னும், ( அல்லாஹ்வின் தூதர்களைப் பொய்யாக்கியும் அவர்களுக்கு மாற்றமாகவும் நடந்துவந்தவர்கள் வசித்திருந்த) எத்தனையோ ஊர்களை_அவற்றை நாம் அழித்திருக்கின்றோம். இரவோடு இரவாக, அல்லது அவர்கள் (களைப்பாறுவதற்காக) பகலில் தூங்கிக் கொண்டிருக்க நம்முடைய வேதனை அவற்றை வந்தடைந்தது.

5. நம்முடைய வேதனை அவர்களுக்கு வந்தடைந்தபோது "நிச்சயமாக நாம் அநியாயக்காரர்களாகி விட்டோம்" என்று அவர்கள் கூறியதைத் தவிர வேறு எதுவும் அவர்களுடைய கூப்பாடாக இருக்கவில்லை.

6. ஆகவே, எவர்கள்பால் தூதர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்களோ அவர்களையும் நிச்சயமாக நாம் கேட்(டு விசாரிப்)போம்; மேலும், (நம்முடைய) தூதர்களையும் நிச்சயமாக நாம் கேட்(டு விசாரிப்)போம்.

7. (அவர்களின் செயலைப்பற்றி நாம்) நன்கறிந்துள்ளவாறு (விசாரணைக்காலத்தில்) நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கூறிக்காண்பிப்போம்; இன்னும் (அவர்களின் சகல நிலைகளை விட்டும்) மறைந்திருப்பவர்களாக நாம் இருக்கவில்லை.

8. மேலும், (ஒவ்வொருவரின் நன்மை தீமைகளையும்,) அந்நாளில் (கூடுதல் குறைவின்றி) எடைபோடுவது உண்மையாகும் ; அப்போது எவர்களுடைய (நன்மையின்) எடைகள் கனத்தனவோ அவர்கள்தாம் நிச்சயமாக வெற்றியாளர்கள்.

9. இன்னும், எவர்களுடைய (நன்மையின்) எடைகள் (கனம் குறைந்து) இலேசாக இருக்கின்றனவோ அத்தகையோர், நம்முடைய வசனங்களை பொய்யாக்கிக் கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் தங்களுக்குத் தாமே நஷ்டமிழைத்துக் கொண்டவர்கள் ஆவர்.

10. (மனிதர்களே!) மேலும், நிச்சயமாக நாம் உங்களை பூமியில் (அனைத்து அதிகாரங்களுடன்) வசிக்கச் செய்தோம். அதில் உங்களுக்கு வாழ்க்கை(வசதி)க்குரிய (அனைத்து)சாதனங்களையும் நாம் ஆக்கித்தந்தோம். (இவ்வாறிருந்தும்) நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகிறீர்கள்.

11. இன்னும், திட்டமாக நாம் உங்களைப் படைத்தோம்; பின்பு உங்களுக்கு உருவமமைத்தோம்; அதன் பின்னர், "ஆதமுக்குச் சிரம் பணியுங்கள்" என மலக்குகளுக்கு நாம் கூறினோம்; அப்பொழுது இப்லீஸைத் தவிர (மற்ற யாவரும் அவருக்கு) சிரம் பணிந்தார்கள்; சிரம் பணிந்தவர்களில் அவன் இருக்கவில்லை.

قَالَ مَا مَنَعَكَ اَلَّا تَسۡجُدَ اِذۡ اَمَرۡتُكَ ؕ قَالَ اَنَا خَيۡرٌ مِّنۡهُ ۚ خَلَقۡتَنِىۡ
مِنۡ نَّارٍ وَّخَلَقۡتَهٗ مِنۡ طِيۡنٍ ﴿١٢﴾ قَالَ فَاهۡبِطۡ مِنۡهَا فَمَا يَكُوۡنُ لَكَ
اَنۡ تَتَكَبَّرَ فِيۡهَا فَاخۡرُجۡ اِنَّكَ مِنَ الصّٰغِرِيۡنَ ﴿١٣﴾ قَالَ اَنۡظِرۡنِىۡۤ
اِلٰى يَوۡمِ يُبۡعَثُوۡنَ ﴿١٤﴾ قَالَ اِنَّكَ مِنَ الۡمُنۡظَرِيۡنَ ﴿١٥﴾ قَالَ فَبِمَاۤ اَغۡوَيۡتَنِىۡ
لَاَقۡعُدَنَّ لَهُمۡ صِرَاطَكَ الۡمُسۡتَقِيۡمَ ۙ ﴿١٦﴾ ثُمَّ لَاٰتِيَنَّهُمۡ مِّنۡۢ بَيۡنِ اَيۡدِيۡهِمۡ
وَمِنۡ خَلۡفِهِمۡ وَعَنۡ اَيۡمَانِهِمۡ وَعَنۡ شَمَآئِلِهِمۡ ؕ وَلَا تَجِدُ اَكۡثَرَهُمۡ
شٰكِرِيۡنَ ﴿١٧﴾ قَالَ اخۡرُجۡ مِنۡهَا مَذۡءُوۡمًا مَّدۡحُوۡرًا ؕ لَمَنۡ تَبِعَكَ مِنۡهُمۡ
لَاَمۡلَئَنَّ جَهَنَّمَ مِنۡكُمۡ اَجۡمَعِيۡنَ ﴿١٨﴾ وَيٰۤاٰدَمُ اسۡكُنۡ اَنۡتَ وَزَوۡجُكَ
الۡجَـنَّةَ فَكُلَا مِنۡ حَيۡثُ شِئۡتُمَا وَلَا تَقۡرَبَا هٰذِهِ الشَّجَرَةَ فَتَكُوۡنَا
مِنَ الظّٰلِمِيۡنَ ﴿١٩﴾ فَوَسۡوَسَ لَهُمَا الشَّيۡطٰنُ لِيُبۡدِىَ لَهُمَا مَا وٗرِىَ
عَنۡهُمَا مِنۡ سَوۡاٰتِهِمَا وَقَالَ مَا نَهٰٮكُمَا رَبُّكُمَا عَنۡ هٰذِهِ الشَّجَرَةِ
اِلَّاۤ اَنۡ تَكُوۡنَا مَلَكَيۡنِ اَوۡ تَكُوۡنَا مِنَ الۡخٰلِدِيۡنَ ﴿٢٠﴾ وَقَاسَمَهُمَاۤ اِنِّىۡ
لَـكُمَا لَمِنَ النّٰصِحِيۡنَ ۙ ﴿٢١﴾ فَدَلّٰٮهُمَا بِغُرُوۡرٍ ۚ فَلَمَّا ذَاقَا الشَّجَرَةَ بَدَتۡ لَهُمَا
سَوۡاٰتُهُمَا وَطَفِقَا يَخۡصِفٰنِ عَلَيۡهِمَا مِنۡ وَّرَقِ الۡجَـنَّةِ ؕ وَنَادٰٮهُمَا رَبُّهُمَاۤ اَلَمۡ
اَنۡهَكُمَا عَنۡ تِلۡكُمَا الشَّجَرَةِ وَاَقُلۡ لَّـكُمَاۤ اِنَّ الشَّيۡطٰنَ لَـكُمَا عَدُوٌّ مُّبِيۡنٌ ﴿٢٢﴾

12. (ஆகவே, அல்லாஹ் இப்லீஸிடம்,) "நான் உனக்குக் கட்டளையிட்ட சமயத்தில், நீ சிரம் பணிவதிலிருந்து உன்னைத் தடுத்தது எது?" என்று கேட்டான்; அதற்கு "நான் அவரைவிட மேலானவன் (ஏனென்றால்,) நீ என்னை நெருப்பால் படைத்தாய்; அவரையோ களிமண்ணால் படைத்தாய்" என்று (இறுமாப்புடன் இப்லீஸாகிய) அவன் கூறினான்.

13. "இதிலிருந்து நீ இறங்கிவிடு; நீ இதில் பெருமை கொள்வதற்கு உனக்குத் தகுதியில்லை; ஆதலால், நீ வெளியேறிவிடு; (உன் பெருமையின் காரணமாக) நிச்சயமாக நீ சிறுமைப் பட்டோரில் இருக்கின்றாய்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

14. (அதற்கு இப்லீஸாகிய) அவன், "(இறந்தோர் மண்ணறைகளிலிருந்து) எழுப்பப்படும் நாள் வரையில் நீ எனக்கு அவகாசம் அளிப்பாயாக" என்று கேட்டான்.

15. "நிச்சயமாக நீ (அவ்வாறே) அவகாசமளிக்கப்பட்டோரில் (ஒருவனாக) இருக்கின்றாய்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

16. "நீ என்னை வழிகெட்டவனாக ஆக்கியதன் காரணத்தால் (ஆதமுடைய சந்ததிகள்) உன்னுடைய நேரான வழியில் (செல்லாது தடை செய்ய வழி மறித்து அதில்) அவர்களுக்காக திட்டமாக உட்கார்ந்து கொள்வேன்" என்றும் (இப்லீஸாகிய) அவன் கூறினான்.

17. "பின்னர், நிச்சயமாக அவர்களுக்கு முன்னும், அவர்களுக்குப் பின்னும், அவர்களின் வலப்புறங்களிலும், அவர்களின் இடப் புறங்களிலும் அவர்களிடம் நான் வந்து (அவர்களை வழி கெடுத்துக்) கொண்டேயிருப்பேன்; மேலும், அவர்களில் பெரும் பாலோரை (உனக்கு) நன்றி செலுத்துவோர்களாக நீ காணமாட்டாய்" (என்றும் கூறினான்.)

18. இகழப்பட்டவனாகவும், விரட்டப்பட்டவனாகவும் நீ இதிலிருந்து வெளியேறி விடு; நிச்சயமாக (உன்னையும்,) அவர்களில் உன்னைப் பின்பற்றியவர்களையும் (சேர்த்து) உங்கள் அனைவரிலிருந்தும் நிச்சயமாக நரகத்தை நான் நிரப்புவேன்" என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்.

19. மேலும், "ஆதமே! நீரும், உம்முடைய மனைவியும் (இச்)சுவர்க்கத்தில் வசித் திருங்கள்; பின்னர், நீங்கள் இருவரும் நீங்கள் நாடிய இடத்திலெல்லாம் (சென்று நாடியவாறு) புசியுங்கள்; இன்னும் இம்மரத்திற்கு(அருகில்) நீங்களிருவரும் நெருங்காதீர்கள்; (அவ்வாறு சென்றால்) நீங்களிருவரும் அநியாயக்காரர்களில் ஆகிவிடுவீர்கள்" (என்றும் அல்லாஹ் கூறினான்).

20. பின்னர், அவ்விருவருக்கும் மறைக்கப்பட்டிருந்த அவ்விருவருடைய வெட்கத்தலங்களை அவ்விருவருக்கும் வெளிப்படுத்துவதற்காக, ஷைத்தான் (அவர்களிடம் இரகசியமாகப் பேசி தவறான எண்ணத்தை) ஊசாட்டத்தை அவ்விருவருக்கும் உண்டாக்கினான். மேலும், "(அதன் கனியைப் புசித்தால்,) நீங்கள் இருவரும் மலக்குகளாகிவிடுவீர்கள்; அல்லது நிரந்தரமாக இருப்பவர்களில் நீங்கள் இருவரும் ஆகிவிடுவீர்கள் என்பதற்காகவே தவிர (வேறெதற்காகவும்) உங்கள் இரட்சகன் அம்மரத்தைவிட்டும் உங்களிருவரையும் தடுக்கவில்லை" என்று கூறினான்.

21. "நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் உபதேசம் செய்பவர்களில் (ஒருவனாக) இருக்கின்றேன்" என்று அவ்விருவரிடம் (இப்லீஸாகிய அவன்) சத்தியமும் செய்தான்.

22. (பின்னர்) அவ்விருவரை ஏமாற்றி (படிப்படியாக தங்கள் நிலையிலிருந்து)கீழே இறங்கச்செய்தான்; எனவே அவ்விருவரும், அம்மரத்தை (அதன்கனியை)ச் சுவைக்கவே, அவ்விருவரின் வெட்கத்தலங்களும் அவ்விருவருக்கும் வெளியா(கித்தெரியலா)யிற்று; அச்சுவனத்தின் இலைகளைக் கொண்டு அவ்விருவரும் தங்களை மூடிக் கொள்ளவும் ஆரம்பித்தனர். மேலும் (அது சமயம்) அவ்விருவரின் இரட்சகன் அவ்விருவரையும் அழைத்து, "இம்மரத்தைவிட்டும் உங்களிருவரையும் நான் தடுக்கவில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களிருவருக்கும் பகிரங்கமான பகைவன் என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா?" (என்று அவ்விருவரையும் கேட்டான்).

قَالَا رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ٚ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ
الْخٰسِرِيْنَ ﴿٢٣﴾ قَالَ اهْبِطُوْا بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۚ وَلَكُمْ فِي
الْاَرْضِ مُسْتَقَرٌّ وَّمَتَاعٌ اِلٰى حِيْنٍ ﴿٢٤﴾ قَالَ فِيْهَا تَحْيَوْنَ وَفِيْهَا
تَمُوْتُوْنَ وَمِنْهَا تُخْرَجُوْنَ ﴿٢٥﴾ يٰبَنِيْٓ اٰدَمَ قَدْ اَنْزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا ع ٢ ٥
يُّوَارِيْ سَوْاٰتِكُمْ وَرِيْشًا ؕ وَلِبَاسُ التَّقْوٰى ۙ ذٰلِكَ خَيْرٌ ؕ ذٰلِكَ مِنْ
اٰيٰتِ اللّٰهِ لَعَلَّهُمْ يَذَّكَّرُوْنَ ﴿٢٦﴾ يٰبَنِيْٓ اٰدَمَ لَا يَفْتِنَنَّكُمُ الشَّيْطٰنُ
كَمَآ اَخْرَجَ اَبَوَيْكُمْ مِّنَ الْجَنَّةِ يَنْزِعُ عَنْهُمَا لِبَاسَهُمَا لِيُرِيَهُمَا سَوْاٰتِهِمَا ؕ
اِنَّهٗ يَرٰىكُمْ هُوَ وَقَبِيْلُهٗ مِنْ حَيْثُ لَا تَرَوْنَهُمْ ؕ اِنَّا جَعَلْنَا الشَّيٰطِيْنَ
اَوْلِيَآءَ لِلَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ ﴿٢٧﴾ وَاِذَا فَعَلُوْا فَاحِشَةً قَالُوْا وَجَدْنَا
عَلَيْهَآ اٰبَآءَنَا وَاللّٰهُ اَمَرَنَا بِهَا ؕ قُلْ اِنَّ اللّٰهَ لَا يَاْمُرُ بِالْفَحْشَآءِ ؕ
اَتَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿٢٨﴾ قُلْ اَمَرَ رَبِّيْ بِالْقِسْطِ قف
وَاَقِيْمُوْا وُجُوْهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّادْعُوْهُ مُخْلِصِيْنَ
لَهُ الدِّيْنَ ۬ كَمَا بَدَاَكُمْ تَعُوْدُوْنَ ﴿٢٩﴾ فَرِيْقًا هَدٰى وَ
فَرِيْقًا حَقَّ عَلَيْهِمُ الضَّلٰلَةُ ؕ اِنَّهُمُ اتَّخَذُوا الشَّيٰطِيْنَ
اَوْلِيَآءَ مِنْ دُوْنِ اللّٰهِ وَيَحْسَبُوْنَ اَنَّهُمْ مُّهْتَدُوْنَ ﴿٣٠﴾

23. (அதற்கு) "எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நாங்களே அநீதமிழைத்துக் கொண்டோம்; நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம்" என்று அவ்விருவரும் (பிரார்த்தித்துக்) கூறினர்.

24. (அதற்கு அல்லாஹ், இதிலிருந்து) நீங்கள் இறங்கிவிடுங்கள்; உங்களில் சிலர் (மற்ற) சிலருக்கு பகைவர்களாவீர்கள்; பூமியில் உங்களுக்குத் தங்குமிடமும் உண்டு; (அதில்) ஒரு காலம் வரை சுகம் அனுபவித்தலும் உண்டு" என்று கூறினான்

25. "அதிலேயே நீங்கள் வாழ்வீர்கள்; அதிலேயே நீங்கள் இறப்பீர்கள்;(பின்னர் ஒரு நாளில்) அதிலிருந்தே நீங்கள் (மீண்டும் உயிர்கொடுத்து ) வெளியாக்கப் படுவீர்கள்" என்று கூறினான்.

26. ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் திட்டமாக நாம் உங்களுக்கு இறக்கிவைத்திருக்கின்றோம்; இன்னும் (பாவங்களை மறைத்துவிடக் கூடிய, பரிசுத்தத்தன்மையான) பயபக்தி எனும்ஆடை__ அதுதான் மிக்க மேலானது; அது அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்.(இதனைக் கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறலாம்.

27. ஆதமுடைய மக்களே! ஷைத்தான் உங்கள் பெற்றோர் இருவரையும், அவ்விருவரின் மானத்தை அவ்விருவருக்கும் காண்பிப்பதற்காகவேண்டி அவ்விருவரின் ஆடையை அவ்விருவரை விட்டும் அவன் களைந்து (அவர்கள் இன்பமுடன் வசித்து வந்த) சுவனத்திலிருந்து வெளியேற்றி (சோதனைக் குள்ளாக்கி)யது போன்று உங்களையும் அவன் சோதனைக்குள்ளாக்கி விட வேண்டாம்; நிச்சயமாக அவனும், அவனுடைய இனத்தாரும் நீங்கள் அவர்களைக் காண முடியாதவாறு (மறைவாக இருந்து கொண்டு) உங்களை (வழி கெடுக்க சமயம்) பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; நிச்சயமாக விசுவாசங் கொள்ளாதவர்களுக்கு அந்த ஷைத்தான்களை நாம் நண்பர்களாக்கி யிருக்கின்றோம்.

28. மேலும், (விசுவாசங்கொள்ளாத) அவர்கள், யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்து விட்டால் அவர்கள்,"எங்கள் மூதாதையர்களை இதன் மீதே நாங்கள் கண்டோம்; அல்லாஹ்வும் இதைக்கொண்டே எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கின்றான்" என்று கூறுகின்றனர்; (அதற்கு நபியே! அவர்களிடம்) "நிச்சயமாக அல்லாஹ்,மானக்கேடான காரியங்களைக்கொண்டு (அவற்றைச் செய்யுமாறு) அவன்கட்டளையிடமாட்டான்; அல்லாஹ்வின் மீது நீங்கள் அறியாதவற்றை(ப் பொய்யாக)க் கூறுகிறீர்களா? என்று நீர் கூறுவீராக!

29. "என் இரட்சகன் நீதத்தையே கட்டளையிட்டிருக்கின்றான்; ஒவ்வொரு தொழும் இடத்திலும் ( தொழுகையின் போது) நீங்கள் உங்கள் முகங்களை (அவனளவிலேயே) நிலைப் படுத்திக் கொள்ளுங்கள்; நீங்கள் அவனுக்கே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அவனையே அழையுங்கள்; அவன் (இல்லாமையிலிருந்து) உங்களை(ப்படைக்க)த் துவக்கிய பிரகாரமே, (நீங்கள் இறந்த பின்னரும், அவனால் உயிர்ப்பிக்கப் பெற்று அவனிடமே) நீங்கள் மீள்வீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

30. (உங்களில்) ஒரு கூட்டத்தாரை அவன் நேரான வழியில் செலுத்தினான்; மற்றொரு கூட்டத்தாருக்கோ வழிகேடு அவர்கள் மீது உறுதியாகி விட்டது; ( காரணம்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி, ஷைத்தான்களையே (தங்கள்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டார்கள்; மேலும், தாங்கள் நிச்சயமாக நேர் வழி பெற்றவர்கள் என எண்ணுகிறார்கள்.

يَٰبَنِيٓ ءَادَمَ خُذُواْ زِينَتَكُمۡ عِندَ كُلِّ مَسۡجِدٖ وَكُلُواْ وَٱشۡرَبُواْ وَلَا
تُسۡرِفُوٓاْۚ إِنَّهُۥ لَا يُحِبُّ ٱلۡمُسۡرِفِينَ ٣١ قُلۡ مَنۡ حَرَّمَ زِينَةَ ٱللَّهِ ٱلَّتِيٓ ع ٣ ١٠
أَخۡرَجَ لِعِبَادِهِۦ وَٱلطَّيِّبَٰتِ مِنَ ٱلرِّزۡقِۚ قُلۡ هِيَ لِلَّذِينَ ءَامَنُواْ فِي
ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا خَالِصَةٗ يَوۡمَ ٱلۡقِيَٰمَةِۗ كَذَٰلِكَ نُفَصِّلُ ٱلۡأٓيَٰتِ لِقَوۡمٖ
يَعۡلَمُونَ ٣٢ قُلۡ إِنَّمَا حَرَّمَ رَبِّيَ ٱلۡفَوَٰحِشَ مَا ظَهَرَ مِنۡهَا وَمَا بَطَنَ وَ
ٱلۡإِثۡمَ وَٱلۡبَغۡيَ بِغَيۡرِ ٱلۡحَقِّ وَأَن تُشۡرِكُواْ بِٱللَّهِ مَا لَمۡ يُنَزِّلۡ بِهِۦ سُلۡطَٰنٗا
وَأَن تَقُولُواْ عَلَى ٱللَّهِ مَا لَا تَعۡلَمُونَ ٣٣ وَلِكُلِّ أُمَّةٍ أَجَلٞۖ فَإِذَا جَآءَ
أَجَلُهُمۡ لَا يَسۡتَأۡخِرُونَ سَاعَةٗ وَلَا يَسۡتَقۡدِمُونَ ٣٤ يَٰبَنِيٓ ءَادَمَ إِمَّا
يَأۡتِيَنَّكُمۡ رُسُلٞ مِّنكُمۡ يَقُصُّونَ عَلَيۡكُمۡ ءَايَٰتِي فَمَنِ ٱتَّقَىٰ وَأَصۡلَحَ
فَلَا خَوۡفٌ عَلَيۡهِمۡ وَلَا هُمۡ يَحۡزَنُونَ ٣٥ وَٱلَّذِينَ كَذَّبُواْ بِـَٔايَٰتِنَا
وَٱسۡتَكۡبَرُواْ عَنۡهَآ أُوْلَٰٓئِكَ أَصۡحَٰبُ ٱلنَّارِۖ هُمۡ فِيهَا خَٰلِدُونَ ٣٦ فَمَنۡ
أَظۡلَمُ مِمَّنِ ٱفۡتَرَىٰ عَلَى ٱللَّهِ كَذِبًا أَوۡ كَذَّبَ بِـَٔايَٰتِهِۦٓۚ أُوْلَٰٓئِكَ
يَنَالُهُمۡ نَصِيبُهُم مِّنَ ٱلۡكِتَٰبِۖ حَتَّىٰٓ إِذَا جَآءَتۡهُمۡ رُسُلُنَا
يَتَوَفَّوۡنَهُمۡ قَالُوٓاْ أَيۡنَ مَا كُنتُمۡ تَدۡعُونَ مِن دُونِ ٱللَّهِۖ
قَالُواْ ضَلُّواْ عَنَّا وَشَهِدُواْ عَلَىٰٓ أَنفُسِهِمۡ أَنَّهُمۡ كَانُواْ كَٰفِرِينَ ٣٧

31. ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் (ஆடைகளினால்) உங்களுடைய அலங்காரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்; மேலும், (அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராளமாக) உண்ணுங்கள்; மேலும், பருகுங்கள். (ஆனால்) வீண் விரயமும் செய்யாதீர்கள்; ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

32. (நபியே!) "அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியிருக்கும் (சகலவித) அலங்காரத்தையும், உணவு வகைகளில் நல்லவற்றையும் (ஆகாதவை யென்று) தடுத்தவர் யார்?" என்று கேட்பீராக! "அது இவ்வுலக வாழ்வில் விசுவாசங் கொண்டவர்களுக்கு (உரியதாகும். எனினும்,) மறுமை நாளில் (மற்றவர்களுக்கன்றி அவர்களுக்கு மட்டுமே) பிரத்தியேகமானதாகும் என்று கூறுவீராக! அறியக்கூடிய சமூகத்தார்க்கு (நம்முடைய) வசனங்களை இவ்வாறு விவரிக்கின்றோம்.

33. என்னுடைய இரட்சகன் (ஆகாதென்று) தடுத்திருப்பதெல்லாம் மானக்கேடான செயல்களை_ அவற்றில் வெளிப்படையானதையும், மறைமுகமானதையும், (இதர) பாவத்தையும், உரிமையின்றி வரம்பு மீறுதலையும், அல்லாஹ்விற்கு நீங்கள் இணைவைப்பதையும்_ அதற்கு எந்தவித ஆதாரத்தையும் அவன் இறக்கிவைக்காதிருக்க, இன்னும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும்_தான்" என்று (நபியே) நீர் கூறுவீராக!

34. ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் ஒரு தவணையுண்டு; ஆகவே அவர்களுடைய தவணை வந்துவிட்டால் ஒரு கணப்பொழுது பிந்தவு மாட்டார்கள்; முந்தவு மாட்டார்கள்.

35. ஆதமுடைய மக்களே! உங்களிலிருந்தே நிச்சயமாக உங்களிடம் (என்னுடைய) தூதர்கள் வந்து, என்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரித்துக்காண்பிக்கும் போது, எவர்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து, (தங்களைச்) சீர்திருத்திக்கொண்டார்களோ, அவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை; அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்.

36. இன்னும் நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி, அவற்றை(ஏற்பதை) விட்டும் கர்வமும் கொண்டார்களே அத்தகையோர்_அவர்கள் நரகவாசிகளாவர்; அவர்கள் அதில் நிரந்தரமாக(த்தங்கி)இருப்பவர்கள்.

37. அல்லாஹ்வின் மீது பொய்யைக் கற்பனை செய்து கூறுகின்றவரைவிட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றவரைவிட மிக அநியாயக்காரர் யார்? அத்தகையோர் _அவர்களுக்கு எழுதப்பட்ட (உணவு, செல்வம் முதலிய)வைகளிலிருந்து அவர்களின் பாத்தியதை அவர்களுக்குக் கிடைக்கும்; முடிவாக நம் தூதர்(களான மலக்கு)கள் அவர்களிடம் வந்து அவர்க(ளுடைய உயிர்)களை கைப்பற்றும் சமயத்தில் "அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைத்துக் கொண்டிருந்தீர்களே அவர்கள் எங்கே?" என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள், "(அவர்கள் யாவும்) எங்களை விட்டு(ஓடி) மறைந்துவிட்டனர்" என்று கூறி, நிச்சயமாகவே தாங்கள், (சத்தியத்தை) நிராகரிப்பவர்களாக இருந்தனர், என தங்களுக்கு விரோதமாகவே அவர்கள் சாட்சியம் கூறுவார்கள்.

قَالَ ادْخُلُوْا فِیْٓ اُمَمٍ قَدْ خَلَتْ مِنْ قَبْلِكُمْ مِّنَ الْجِنِّ وَ الْاِنْسِ
فِی النَّارِ ؕ كُلَّمَا دَخَلَتْ اُمَّةٌ لَّعَنَتْ اُخْتَهَا ؕ حَتّٰۤی اِذَا ادَّارَكُوْا فِیْهَا
جَمِیْعًا ۙ قَالَتْ اُخْرٰىهُمْ لِاُوْلٰىهُمْ رَبَّنَا هٰۤؤُلَآءِ اَضَلُّوْنَا فَاٰتِهِمْ
عَذَابًا ضِعْفًا مِّنَ النَّارِ ؕ۬ قَالَ لِكُلٍّ ضِعْفٌ وَّ لٰكِنْ لَّا تَعْلَمُوْنَ ﴿۳۸﴾
وَ قَالَتْ اُوْلٰىهُمْ لِاُخْرٰىهُمْ فَمَا كَانَ لَكُمْ عَلَیْنَا مِنْ فَضْلٍ
فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْسِبُوْنَ ﴿۳۹﴾ ع اِنَّ الَّذِیْنَ كَذَّبُوْا ع ٤
بِاٰیٰتِنَا وَ اسْتَكْبَرُوْا عَنْهَا لَا تُفَتَّحُ لَهُمْ اَبْوَابُ السَّمَآءِ وَ لَا
یَدْخُلُوْنَ الْجَنَّةَ حَتّٰی یَلِجَ الْجَمَلُ فِیْ سَمِّ الْخِیَاطِ ؕ وَ كَذٰلِكَ
نَجْزِی الْمُجْرِمِیْنَ ﴿۴۰﴾ لَهُمْ مِّنْ جَهَنَّمَ مِهَادٌ وَّ مِنْ فَوْقِهِمْ غَوَاشٍ ؕ
وَ كَذٰلِكَ نَجْزِی الظّٰلِمِیْنَ ﴿۴۱﴾ وَ الَّذِیْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ
لَا نُكَلِّفُ نَفْسًا اِلَّا وُسْعَهَاۤ اُولٰٓىٕكَ اَصْحٰبُ الْجَنَّةِ ۚ هُمْ فِیْهَا
خٰلِدُوْنَ ﴿۴۲﴾ وَ نَزَعْنَا مَا فِیْ صُدُوْرِهِمْ مِّنْ غِلٍّ تَجْرِیْ مِنْ
تَحْتِهِمُ الْاَنْهٰرُ ۚ وَ قَالُوا الْحَمْدُ لِلّٰهِ الَّذِیْ هَدٰىنَا لِهٰذَا ۫ وَ مَا كُنَّا
لِنَهْتَدِیَ لَوْ لَاۤ اَنْ هَدٰىنَا اللّٰهُ ۚ لَقَدْ جَآءَتْ رُسُلُ رَبِّنَا بِالْحَقِّ ؕ
وَ نُوْدُوْۤا اَنْ تِلْكُمُ الْجَنَّةُ اُوْرِثْتُمُوْهَا بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۴۳﴾ الثلثة

38. (அதற்கு அல்லாஹ் அவர்களிடம்,) "ஜின்களிலும், மனிதர்களிலும் உங்களுக்கு முன்னர் சென்றுவிட்ட கூட்டத்தினர்களுடன் நீங்களும் சேர்ந்து நரக நெருப்பில் நுழையுங்கள்" என்று கூறுவான்; அவர்களில் ஒவ்வொரு சமுதாயத்தினரும் (நரகத்திற்குள்) நுழையும் பொழுதெல்லாம் (தனக்கு முன் அங்கு வந்துள்ள) தங்கள் (இனத்தாரின் முன்சென்ற) சகக்கூட்டத்தினரை சபிப்பார்கள்; முடிவாக அவர்கள் யாவரும் நரகத்தையடைந்த பொழுது (அவர்களில்) பிந்தியவர்கள் (பின்பற்றியவர்கள், பின்பற்றப்பட்ட தலைவர்களான) முந்தியவர்களைப் பற்றி "எங்கள் இரட்சகனே! இவர்கள் தாம் எங்களை வழிகெடுத்தவர்கள்; ஆகவே, அவர்களுக்கு (எங்களைவிட) நரகத்தில் இரட்டிப்பான வேதனையைக் கொடுப்பாயாக!" என்று கூறுவார்கள்; அதற்கு அவன், "உங்களில் ஒவ்வொருவருக்குமே இரட்டிப்பு (வேதனை) உண்டு; எனினும், (இதன் காரணத்தை) நீங்கள் அறியமாட்டீர்கள்" என்று கூறுவான்.

39. அவர்களில் முந்தியவர்கள் அவர்களில் பிந்தியவர்களிடம், "எங்களைவிட உங்களுக்கு யாதொரு மேன்மையும் கிடையாது; ஆதலால் நீங்கள் சம்பாதித்துக் கொண்ட (தீ) வினையின் காரணமாக (நீங்களும் இரட்டிப்பு) வேதனையைச் சுவையுங்கள்" என்று கூறுவார்கள்.

40. நிச்சயமாக நம்முடைய வசனங்களைப் பொய்ப்பித்து, அவற்றை (ஏற்பதை) விட்டும் பெருமையும் கொண்டார்களே அத்தகையோர் _ அவர்களுக்கு, (அல்லாஹ்வின் அருளுக்குரிய) வானத்தின் (அருள்) வாயில்கள் திறக்கப்பட மாட்டாது; மேலும் ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனத்தில் நுழையமாட்டார்கள்; மேலும் குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.

41. அவர்களுக்கு நரகத்திலிருந்து (நெருப்பு) விரிப்புகளும், அவர்களுக்கு மேலிருந்து (போர்த்திக் கொள்ள நெருப்புப்) போர்வைகளும் உண்டு; இன்னும் இவ்வாறே அநியாயக்காரர்களுக்கு நாம் கூலி கொடுப்போம்.

42. இன்னும், விசுவாசங்கொண்டு, நற்காரியங்களையும் செய்கின்றார்களே அத்தகையோர் _ எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்குத் தக்கவாறல்லாது நாம் சிரமப்படுத்தமாட்டோம் _ அவர்கள் தான் சுவனவாசிகள்; அதில் அவர்கள் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.

43. மேலும், அவர்களுடைய நெஞ்சங்களிலிருந்த குரோதத்தை நாம் நீக்கி விடுவோம்; அவர்களுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்; இன்னும் அவர்கள், "இந்தச் சுவனபதியை அடை(வ)தற்குரிய நேரான வழியில் எங்களைச் செலுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியதாகும். அல்லாஹ் எங்களை நேர் வழியில் செலுத்தியிருக்காவிடில், நிச்சயமாக நாங்கள் நேர்வழியை அடைந்தவர்களாக ஆகி இருக்கவேமாட்டோம்; எங்கள் இரட்சகனின் தூதர்கள் (சந்தேகமின்றி) சத்திய (மார்க்க)த்தையே நிச்சயமாக (எங்களுக்கு)க் கொண்டு வந்தார்கள்" என்று கூறுவார்கள். அந்த சொர்க்கம், நீங்கள் (பூமியில்) செய்து கொண்டிருந்த (நன்மையான)வற்றின் (மூலம் அல்லாஹ்வின் அருளைப்பெற்று அதன்) காரணமாகவே அதனை நீங்கள் வாரிசாக்கப் பட்டுள்ளீர்கள் என்று (சப்தமிட்டு) அழைக்கப்படுவார்கள்.

وَنَادٰۤى اَصْحٰبُ الْجَنَّةِ اَصْحٰبَ النَّارِ اَنْ قَدْ وَجَدْنَا مَا وَعَدَنَا
رَبُّنَا حَقًّا فَهَلْ وَجَدْتُّمْ مَّا وَعَدَ رَبُّكُمْ حَقًّا ؕ قَالُوْا نَعَمْ ۚ فَاَذَّنَ
مُؤَذِّنٌۢ بَيْنَهُمْ اَنْ لَّعْنَةُ اللّٰهِ عَلَى الظّٰلِمِيْنَ ۙ﴿۴۴﴾ الَّذِيْنَ يَصُدُّوْنَ
عَنْ سَبِيْلِ اللّٰهِ وَيَبْغُوْنَهَا عِوَجًا ۚ وَهُمْ بِالْاٰخِرَةِ كٰفِرُوْنَ ﴿۴۵﴾ وقف لازم
وَبَيْنَهُمَا حِجَابٌ ۚ وَعَلَى الْاَعْرَافِ رِجَالٌ يَّعْرِفُوْنَ كُلًّاۢ بِسِيْمٰىهُمْ ۚ
وَنَادَوْا اَصْحٰبَ الْجَنَّةِ اَنْ سَلٰمٌ عَلَيْكُمْ ۣ لَمْ يَدْخُلُوْهَا وَهُمْ يَطْمَعُوْنَ ﴿۴۶﴾
وَاِذَا صُرِفَتْ اَبْصَارُهُمْ تِلْقَآءَ اَصْحٰبِ النَّارِ ۙ قَالُوْا رَبَّنَا لَا
تَجْعَلْنَا مَعَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿۴۷﴾ وَنَادٰۤى اَصْحٰبُ الْاَعْرَافِ رِجَالًا ع ١٢
يَّعْرِفُوْنَهُمْ بِسِيْمٰىهُمْ قَالُوْا مَاۤ اَغْنٰى عَنْكُمْ جَمْعُكُمْ وَمَا كُنْتُمْ
تَسْتَكْبِرُوْنَ ﴿۴۸﴾ اَهٰۤؤُلَآءِ الَّذِيْنَ اَقْسَمْتُمْ لَا يَنَالُهُمُ اللّٰهُ بِرَحْمَةٍ ؕ
اُدْخُلُوا الْجَنَّةَ لَا خَوْفٌ عَلَيْكُمْ وَلَاۤ اَنْتُمْ تَحْزَنُوْنَ ﴿۴۹﴾ وَنَادٰۤى
اَصْحٰبُ النَّارِ اَصْحٰبَ الْجَنَّةِ اَنْ اَفِيْضُوْا عَلَيْنَا مِنَ الْمَآءِ اَوْ مِمَّا
رَزَقَكُمُ اللّٰهُ ؕ قَالُوْۤا اِنَّ اللّٰهَ حَرَّمَهُمَا عَلَى الْكٰفِرِيْنَ ۙ﴿۵۰﴾ الَّذِيْنَ
اتَّخَذُوْا دِيْنَهُمْ لَهْوًا وَّلَعِبًا وَّغَرَّتْهُمُ الْحَيٰوةُ الدُّنْيَا ۚ فَالْيَوْمَ
نَنْسٰىهُمْ كَمَا نَسُوْا لِقَآءَ يَوْمِهِمْ هٰذَا ۙ وَمَا كَانُوْا بِاٰيٰتِنَا يَجْحَدُوْنَ ﴿۵۱﴾

44. இன்னும், (அந்நாளில்) சுவர்க்கவாசிகள் நரகவாசிகளை அழைத்து "எங்கள் இரட்சகன் எங்களுக்கு வாக்களித்திருந்ததை நாங்கள் உண்மையாக பெற்றுக்கொண்டோம்; நீங்களும், உங்கள் இரட்சகன் உங்களுக்கு வாக்களித்திருந்ததை உண்மையாகவே பெற்றுக் கொண்டீர்களா?" என்று (சப்தமிட்டுக்)கேட்பார்கள். அ(தற்க)வர்கள், "ஆம்!(பெற்றுக்கொண்டோம்)" என்று கூறுவார்கள்; அது சமயம், அவர்களுக்கு மத்தியில் அறிவிப்பாளர் ஒருவர் "நிச்சயமாக அல்லாஹ்வுடைய சாபம் (வரம்பு மீறிய) அநியாயக்காரர்கள் மீது உண்டாவதாக!" என அறிவிப்பார்.

45 அத்தகையோர்_ அவர்கள் அல்லாஹ்வின் பாதையைவிட்டு (மனிதர்களைத்) தடுத்துக்கொண்டும், இன்னும் (அவ்வழிக்கு யாரும் செல்லாதிருக்க) அதனைக் கோணலாக்கவும் தேடினார்கள்; அன்றியும் அவர்கள் மறுமையை நிராகரிப்பவர்கள்.

46. (நரக வாசிகளும் சுவன வாசிகளும் ஆகிய) அவ்விருவருக்குமிடையில் ஒரு திரை(தடுப்புச் சுவர்) இருக்கும்; (அதன்) சிகரங்களில் சில மனிதர்கள் இருப்பார்கள்; (நரகவாசி, சுவர்க்கவாசியாகிய) ஒவ்வொருவரையும் அவர்களின் அடையாளத்தைக் கொண்டே அவர்கள் அறிந்து கொள்வார்கள்; மேலும், அவர்கள், சுவர்க்கவாசிகளை அழைத்து, "அல்லாஹ்வின் சாந்தி உங்கள் மீது உண்டாவதாக!" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள். (சிகரங்களில் இருக்கும்) இவர்கள் (இதுவரையிலும்) அதில்(சுவனத்தில்) நுழையவில்லை; அவர்களோ (அதில் நுழைவதைமிக்கஆசித்து) ஆவல்கொண்டிருப்பார்கள்.

47. இன்னும், இவர்களின் பார்வைகள் நரகவாசிகளின் பக்கம் திருப்பப் பட்டால், (அவர்கள் படும் வேதனையைக் கண்டு திடுக்கிட்டு) "எங்கள் இரட்சகனே! அந்த அநியாயக்கார சமூகத்தாருடன் (நரகத்தில்) எங்களையும் நீ ஆக்கிவிடாதிருப்பாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள்.

48.சிகரங்களில் இருப்பவர்கள், சிலமனிதர்களை_ அவர்களின் அடையாளத் தைக்கொண்டு அவர்களை அறிந்துகொண்டு, அழைத்து "உங்களின் கூட்டமும், இன்னும் நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருந்தீர்களே அதுவும், உங்களை விட்டும் எதையும் தேவையற்று வைக்க (பலனளிக்க) வில்லையே" எனக் கூறுவார்கள்.

49. (முஸ்லிம்களான) அவர்களுக்கு அல்லாஹ் அருளைக் கிடைக்கச் செய்யமாட்டான் என்று (காபிர்களாகிய) நீங்கள் சத்தியம்செய்தீர்களே அவர்கள் இவர்கள் அல்லவா?( என்றும் கூறுவார்கள். பிறகு சிகர வாசிகளை நோக்கி,) "நீங்கள் சுவனபதிசென்றுவிடுங்கள் உங்களுக்கு எவ்வித பயமுமில்லை; நீங்கள் கவலையும் அடையமாட்டீர்கள்" (என்று அல்லாஹ் கூறுவான்).

50. பின்னர், நரகவாசிகள் சுவன வாசிகளை அழைத்து "தண்ணீரில் (சிறிதளவு) எங்கள் மீது கொட்டுங்கள்; அல்லது அல்லாஹ் உங்களுக்கு உணவாக அளித்ததிலிருந்து (சிறிதளவேனும் எங்களுக்குத் தாருங்கள்",) என்று (வருந்திக்) கேட்பார்கள்; அ(தற்க)வர்கள், நிச்சயமாக அல்லாஹ் (உங்களைப் போன்ற) நிராகரிப்போரின்மீது இவ்விரண்டையும் தடுத்துவிட்டான்" என்று (பதில்) கூறுவார்கள்.

51. அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தங்களுடைய மார்க்கத்தை வீணாகவும், விளையாட்டாகவும் எடுத்துக் கொண்டார்கள் ; இவ்வுலக வாழ்க்கை அவர்களை ஏமாற்றியும் விட்டது. எனவே அவர்களுடைய இந்நாளின் சந்திப்பை அவர்கள் மறந்து, நம்முடைய வசனங்களையும் அவர்கள் மறுத்துக் கொண்டிருந்ததைப் போன்று, நாமும் இன்றைய தினம் அவர்களை மறந்து விடுவோம்(என்று அல்லாஹ் கூறிவிடுவான்).

وَلَقَدْ جِئْنٰهُمْ بِكِتٰبٍ فَصَّلْنٰهُ عَلٰى عِلْمٍ هُدًى وَّرَحْمَةً
لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۵۲﴾ هَلْ يَنْظُرُوْنَ اِلَّا تَاْوِيْلَهٗ ۭ يَوْمَ يَاْتِيْ
تَاْوِيْلُهٗ يَقُوْلُ الَّذِيْنَ نَسُوْهُ مِنْ قَبْلُ قَدْ جَآءَتْ رُسُلُ
رَبِّنَا بِالْحَقِّ ۚ فَهَلْ لَّنَا مِنْ شُفَعَآءَ فَيَشْفَعُوْا لَنَآ اَوْ نُرَدُّ فَنَعْمَلَ
غَيْرَ الَّذِيْ كُنَّا نَعْمَلُ ۭ قَدْ خَسِرُوْٓا اَنْفُسَهُمْ وَضَلَّ عَنْهُمْ مَّا
كَانُوْا يَفْتَرُوْنَ ﴿۵۳﴾ ع اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَ ۱۴ع
الْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۣ يُغْشِي الَّيْلَ
النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا ۙ وَّالشَّمْسَ وَالْقَمَرَ وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍۢ
بِاَمْرِهٖ ۭ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ۭ تَبٰرَكَ اللّٰهُ رَبُّ الْعٰلَمِيْنَ ﴿۵۴﴾ اُدْعُوْا
رَبَّكُمْ تَضَرُّعًا وَّخُفْيَةً ۭ اِنَّهٗ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ﴿۵۵﴾ ۚ وَلَا تُفْسِدُوْا
فِي الْاَرْضِ بَعْدَ اِصْلَاحِهَا وَادْعُوْهُ خَوْفًا وَّطَمَعًا ۭ اِنَّ رَحْمَتَ
اللّٰهِ قَرِيْبٌ مِّنَ الْمُحْسِنِيْنَ ﴿۵۶﴾ وَهُوَ الَّذِيْ يُرْسِلُ الرِّيٰحَ
بُشْرًۢا بَيْنَ يَدَيْ رَحْمَتِهٖ ۭ حَتّٰٓي اِذَآ اَقَلَّتْ سَحَابًا ثِقَالًا
سُقْنٰهُ لِبَلَدٍ مَّيِّتٍ فَاَنْزَلْنَا بِهِ الْمَاۗءَ فَاَخْرَجْنَا بِهٖ مِنْ
كُلِّ الثَّمَرٰتِ ۭ كَذٰلِكَ نُخْرِجُ الْمَوْتٰى لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ﴿۵۷﴾

52. திட்டமாக நாம் அவர்களுக்கு ஒரு வேதத்தைக் கொண்டு வந்தோம். அதில் ஒவ்வொன்றையும் நம் அறிவின்படி (அதன் அடிப்படையில்) விவரித்திருக்கின்றோம்; (அன்றி, அது) விசுவாசங் கொண்ட சமூகத்தார்க்கு நேரான வழியாகவும், அருளாகவும் இருக்கின்றது.

53. (மக்கா வாசிகள், தங்களுக்கு எச்சரிக்கப்பட்டு வந்த) அதன் முடிவு ( வெளிப்படுவதைத்) தவிர (வேறெதனையும்) இவர்கள் எதிர்பார்க்கின்றனரா? அதன் முடிவு (வெளிப்பட்டு)வரும் நாளில் இதற்கு முன் அதனை(முற்றிலும்) மறந்திருந்தோர், "நிச்சயமாக எங்கள் இரட்சகனின் தூதர்கள் (எங்களிடம்) சத்திய (வேத)த்தைக் கொண்டு வந்தனர், (இன்று) எங்களுக்குப் பரிந்துரையாளர்கள் எவரும் உண்டா? அவ்வாறாயின், அவர்கள் எங்களுக்குப் பரிந்துரைக்கட்டும்; அல்லது நாங்கள் (உலகத்திற்குத்) திருப்பப்படுவோமா? (அவ்வாறாயின் முன்னர்) நாங்கள் செய்து கொண்டிருந்தவற்றல்லாததைச் செய்வோம்" என்று கூறுவார்கள்; திட்டமாக இவர்கள் தமக்குத் தாமே இழப்பை உண்டாக்கிக் கொண்டனர்; அன்றியும் இவர்கள் (பொய்யாகக்) கற்பனை செய்து கொண்டிருந்தவையும் (அது சமயம்) இவர்களை விட்டு மறைந்தும் விடும்.

54. நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்; அவன் எத்தகையவனென்றால், வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற்குரியவாறும் அர்ஷின் மீது இருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்; அவனே இரவால் பகலை மூடுகிறான். அது தீவிரமாக அதனைப் பின் தொடர்கிறது; இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்குவயப்படுத்தப் பட்டதாகப் (படைத்திருக்கிறான்) படைத்தலும், கட்டளையும் அவனுக்கே உரியதெனத் தெரிந்து கொள்ளுங்கள்; அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மகத்துவமுடையவனாகி விட்டான்.

55. (ஆகவே, விசுவாசிகளே!) உங்கள் இரட்சகனை மிக்க பணிவாகவும், (தாழ்ந்த குரலில்) மெதுவாகவும் (உங்களுக்கு வேண்டியவைகளைக் கோரிப் பிரார்த்தனை செய்து) நீங்கள் அழையுங்கள்; நிச்சயமாக அவன் வரம்பு மீறுவோரை நேசிக்கமாட்டான்.

56. மேலும், பூமியில்_ (மனிதர்களே! சமாதானமும், அமைதியும் உண்டாகி )அது சீர்திருத்தமான பின்னர், அதில் குழப்பம் செய்யாதீர்கள்; (இரட்சகனுடைய தண்டனைக்குப்) பயந்தும், ( அவனுடைய அருளை ) ஆசித்தும் அவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருங்கள்; நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு மிக்க சமீபத்திலிருக்கிறது.

57. இன்னும், அவன் எத்தகையவனென்றால் , அவனுடைய அருள்மாரிக்கு முன்னர், நன்மாராயமாக, (குளிர்ந்த) காற்றுகளை அவன் அனுப்பிவைக்கின்றான்; முடிவாக அது (கருக்கொண்டு) கனத்த மேகங்களைச் சுமந்து வருமானால் அதனை நாம், (வரண்டு) இறந்த ஊரின் பக்கம் ஓட்டிச் செல்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு நாம் தண்ணீரை இறக்கி வைக்கிறோம்; பின்னர் அதைக் கொண்டு சகலவகைக் கனிகளையும் வெளிப்படுத்துகின்றோம்; இவ்வாறே மரணித்தோரை (அவர்களின் சமாதிகளிலிருந்து) உயிர் கொடுத்து நாம் வெளிப்படுத்துவோம்; (இதனை அறிந்து) நீங்கள் நல்லுணர்ச்சி பெறலாம்.

وَالْبَلَدُ الطَّيِّبُ يَخْرُجُ نَبَاتُهٗ بِاِذْنِ رَبِّهٖ ۚ وَالَّذِیْ خَبُثَ
لَا يَخْرُجُ اِلَّا نَكِدًا ؕ كَذٰلِكَ نُصَرِّفُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّشْكُرُوْنَ ﴿۵۸﴾ ع ٧ ع ۵ ۱۴
لَقَدْ اَرْسَلْنَا نُوْحًا اِلٰى قَوْمِهٖ فَقَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا
لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ اِنِّیْۤ اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿۵۹﴾
قَالَ الْمَلَاُ مِنْ قَوْمِهٖۤ اِنَّا لَنَرٰىكَ فِیْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿۶۰﴾ قَالَ
يٰقَوْمِ لَيْسَ بِیْ ضَلٰلَةٌ وَّلٰكِنِّیْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۶۱﴾
اُبَلِّغُكُمْ رِسٰلٰتِ رَبِّیْ وَاَنْصَحُ لَكُمْ وَاَعْلَمُ مِنَ اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ ﴿۶۲﴾
اَوَعَجِبْتُمْ اَنْ جَآءَكُمْ ذِكْرٌ مِّنْ رَّبِّكُمْ عَلٰى رَجُلٍ مِّنْكُمْ
لِيُنْذِرَكُمْ وَلِتَتَّقُوْا وَلَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۶۳﴾ فَكَذَّبُوْهُ فَاَنْجَيْنٰهُ
وَالَّذِيْنَ مَعَهٗ فِی الْفُلْكِ وَاَغْرَقْنَا الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ؕ
اِنَّهُمْ كَانُوْا قَوْمًا عَمِيْنَ ﴿۶۴﴾ ع وَاِلٰى عَادٍ اَخَاهُمْ هُوْدًا ؕ قَالَ ٨ ع ۶ ۱۵
يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ اَفَلَا تَتَّقُوْنَ ﴿۶۵﴾
قَالَ الْمَلَاُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَوْمِهٖۤ اِنَّا لَنَرٰىكَ فِیْ
سَفَاهَةٍ وَّاِنَّا لَنَظُنُّكَ مِنَ الْكٰذِبِيْنَ ﴿۶۶﴾ قَالَ يٰقَوْمِ
لَيْسَ بِیْ سَفَاهَةٌ وَّلٰكِنِّیْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ﴿۶۷﴾

58. வளமான நல்லபூமி _ தன் இரட்சகனின் கட்டளையைக் கொண்டு அதன் தாவரத்தை வெளியாக்குகிறது; இன்னும், கெட்டது (வளமற்ற பூமி) வெகு சொற்பமேயன்றி வெளியாக்குவதில்லை; நன்றி செலுத்தும் மக்களுக்கு இவ்வாறு திரும்பத்திரும்ப (பலவகைகளிலும் நம்முடைய) வசனங்களை விவரிக்கின்றோம்.

59. திட்டமாக நாம், "நூஹை" அவருடைய சமூகத்தாரின்பால் (நம்முடைய தூதராக) அனுப்பிவைத்தோம்; அப்பொழுது அவர் (அவர்களிடம்) "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் உங்களுக்கில்லை. (இதற்கு நீங்கள் மாறு செய்தால்) நிச்சயமாக, உங்களுக்கு (வரக்கூடிய) மகத்தானதொரு நாளின் வேதனையை நான் பயப்படுகிறேன்" என்று கூறினார்.

60. அதற்கு அவருடைய சமூகத்தாரிலிருந்த பிரதானிகள் "நிச்சயமாக நாங்கள் உம்மை பகிரங்கமான வழிகேட்டிலிருப்பதையே காண்கின்றோம்" என்று கூறினார்கள்.

61. அ(தற்க)வர், "என்னுடைய சமூகத்தினரே! என்னிடத்தில் எத்தகைய வழிகேடும் இல்லை; எனினும், நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து (அனுப்பப்பட்ட) ஒரு தூதன்" என்று கூறினார்.

62. "நான் என் இரட்சகனின் தூதுகளையே உங்களுக்கு எத்திவைக்கிறேன்; உங்களுக்கு நல்லுபதேசமும் செய்கிறேன். மேலும், அல்லாஹ்விடமிருந்து நீங்கள் அறியாதவற்றை நான் அறிகிறேன்" (என்றும்),

63. "உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும், நீங்கள் பயந்து நடப்பதற்காகவும், (அல்லாஹ்வால்) நீங்கள் அருள் செய்யப்பட வேண்டுமென்பதற்காகவும் உங்களிலுள்ள ஒரு மனிதர் மீது உங்களுடைய இரட்சகனிடமிருந்து உங்களுக்கு நல்லுபதேசம் வருவதைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?" (என்றும் கூறினார்).

64. பின்னும், அவரை அவர்கள் பொய்யாக்கினர்; ஆதலால், அவரையும் அவருடனிருந்தோரையும் கப்பலில் (ஏற்றிக்) காப்பாற்றினோம்; மேலும், நம்முடைய வசனங்களைப் பொய்ப்படுத்தியவர்களை (ப் பெரு வெள்ளத்தில்) மூழ்கடித்து விட்டோம்; நிச்சயமாக அவர்கள் (சத்தியத்தைக் காண முடியாத) குருட்டு சமூகத்தாராகவே இருந்தனர்.

65. மேலும், "ஆது" (கூட்டத்தினர்)பால் அவர்களுடைய சகோதரர் ஹூதையும் (நம்முடைய நபியாக அனுப்பினோம்.) அவர் (அவர்களிடம்), "என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனைத் தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை; (ஆகவே) நீங்கள் (அவனுக்குப்) பயப்பட வேண்டாமா?" என்று கூறினார்.

66. (அதற்கு) அவருடைய சமூகத்தாரிலிருந்து நிராகரித்து விட்டார்களே அத்தகைய பிரதானிகள், "நிச்சயமாக நாம் உம்மை மடமையில் (ஆழ்ந்து கிடப்பவராகவே) காண்கிறோம்; அன்றியும் நிச்சயமாக உம்மைப் பொய்யர்களில் (உள்ளவரென) நாம் எண்ணுகின்றோம்" என்று கூறினார்கள்.

67. அ(தற்க)வர், "என்னுடைய சமூகத்தாரே! என்னிடம் மடமையில்லை, எனினும் நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனிடமிருந்து (அனுப்பப்பட்ட) ஒரு தூதன் ஆவேன்" என்று கூறினார்.

أُبَلِّغُكُمْ رِسٰلٰتِ رَبِّيْ وَاَنَا لَكُمْ نَاصِحٌ اَمِيْنٌ ﴿٦٨﴾ اَوَعَجِبْتُمْ
اَنْ جَآءَكُمْ ذِكْرٌ مِّنْ رَّبِّكُمْ عَلٰى رَجُلٍ مِّنْكُمْ لِيُنْذِرَكُمْ ؕ
وَاذْكُرُوْٓا اِذْ جَعَلَكُمْ خُلَفَآءَ مِنْۢ بَعْدِ قَوْمِ نُوْحٍ وَّزَادَكُمْ
فِي الْخَلْقِ بَصْۜطَةً ۚ فَاذْكُرُوْٓا اٰلَآءَ اللّٰهِ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿٦٩﴾
قَالُوْٓا اَجِئْتَنَا لِنَعْبُدَ اللّٰهَ وَحْدَهٗ وَنَذَرَ مَا كَانَ يَعْبُدُ
اٰبَآؤُنَا ۚ فَاْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿٧٠﴾
قَالَ قَدْ وَقَعَ عَلَيْكُمْ مِّنْ رَّبِّكُمْ رِجْسٌ وَّغَضَبٌ ؕ
اَتُجَادِلُوْنَنِيْ فِيْٓ اَسْمَآءٍ سَمَّيْتُمُوْهَآ اَنْتُمْ وَاٰبَآؤُكُمْ مَّا
نَزَّلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ ؕ فَانْتَظِرُوْٓا اِنِّيْ مَعَكُمْ مِّنَ
الْمُنْتَظِرِيْنَ ﴿٧١﴾ فَاَنْجَيْنٰهُ وَالَّذِيْنَ مَعَهٗ بِرَحْمَةٍ مِّنَّا وَ
قَطَعْنَا دَابِرَ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَمَا كَانُوْا مُؤْمِنِيْنَ ﴿٧٢﴾ ع ١٦ ع
وَاِلٰى ثَمُوْدَ اَخَاهُمْ صٰلِحًا ۘ قَالَ يٰقَوْمِ اعْبُدُوا اللّٰهَ مَا وقف لازم
لَكُمْ مِّنْ اِلٰهٍ غَيْرُهٗ ؕ قَدْ جَآءَتْكُمْ بَيِّنَةٌ مِّنْ رَّبِّكُمْ ؕ
هٰذِهٖ نَاقَةُ اللّٰهِ لَكُمْ اٰيَةً فَذَرُوْهَا تَاْكُلْ فِيْٓ
اَرْضِ اللّٰهِ وَلَا تَمَسُّوْهَا بِسُوْٓءٍ فَيَاْخُذَكُمْ عَذَابٌ اَلِيْمٌ ﴿٧٣﴾

68. "என் இரட்சகனின் தூது(ச்செய்தி) களையே நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன்; மேலும், நான் உங்களுக்கு நம்பிக்கையான உபதேசியாகவும் இருக்கின்றேன்".

69. "உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, உங்களிலுள்ள ஆடவர் மீது உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்காக நல்லுபதேசம் வந்திருப்பதைப்பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?மேலும், நூஹ் உடைய சமூகத்தாருக்குப் பின்னர், அவன் உங்களை (முன்னவர்களுக்குப்) பின்தோன்றல் களாக்கி வைத்து, படைப்பில் (உடலமைப்பில் உயரமானவர்களாகவும்) விரிந்த தேகத்தையும் (மற்றவர்களைவிட) உங்களுக்கு அதிகமாக்கியிருப்பதையும் நீங்கள் நினைத்துப் பாருங்கள். ஆகவே நீங்கள் வெற்றியடைவதற்காக அல்லாஹ்வின் எண்ணிலடங்காத ஏனைய அருட்கொடைகளை நீங்கள் நினைத்துப் பாருங்கள்"(என்றும் கூறினார்).

70. அ(தற்க)வர்கள் ," எங்கள் மூதாதையர்கள் வணங்கிக்கொண்டிருந்தவைகளை நாங்கள் விட்டு விட்டு, அல்லாஹ்வை_ (வணக்கத்தில்) அவன் தனித்தவனாக இருக்க நாங்கள் வணங்கவேண்டும் என்பதற்காகவா எங்களிடம் நீர் வந்தீர்? (நாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம்.) ஆகவே நீர் உண்மையாளர்களில் உள்ளவராக இருந்தால், நீர் வாக்களித்ததை எங்களுக்குக் கொண்டு வாரும் " என்று கூறினர்.

71. அ(தற்க)வர்," உங்கள்மீது உங்களுடைய இரட்சகனிடமிருந்து வேதனையும் (அவனுடைய) கோபமும் திட்டமாக விதியாகிவிட்டது; (நீங்கள் தெய்வங்களெனப் பெயர்வைத்திருக்கும்) சில பெயர்களில் என்னிடம் நீங்கள் தர்க்கிக்கின்றீர்களா? அவற்றை நீங்களும், உங்கள் மூதாதையர்களும் பெயர்களாக வைத்துக்கொண்டீர்கள்; அல்லாஹ் அதற்கு எவ்விதச்சான்றையும் இறக்கிவைக்கவில்லை; ஆகவே, (உங்களுக்கு வரக்கூடிய வேதனையை) நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; நிச்சயமாக நானும் உங்களுடன் எதிர்பார்ப்பவர்களில் இருக்கின்றேன்" என்று கூறினார்.

72. ஆகவே, அவரையும், அவருடன் இருந்தோரையும் நம்முடைய அருளைக் கொண்டு நாம் காப்பற்றினோம்; நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கியோரையும், விசுவாசங்கொள்ளாதவர்களாக இருந்தோரையும் வேரறுத்து விட்டோம்.

73. "ஸமூது" கூட்டத்தாருக்கு அவர்களுடைய சகோதரர் ஸாலிஹையும் (நம்முடைய தூதராக அனுப்பிவைத்தோம்.) அவர் (அவர்களிடம்) "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; உங்களுக்கு அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை; (இதற்காக) உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான ஒரு அத்தாட்சி உங்களிடம் திட்டமாக வந்திருக்கின்றது; உங்களுக்கோர் அத்தாட்சியாக, இது அல்லாஹ்வுடைய பெண்ஒட்டகமாகும்; ஆகவே அதனை நீங்கள் விட்டு விடுங்கள்; அது (தன் இஷ்டப்படி ) அல்லாஹ்வுடைய பூமியில் (எங்கும் தடையின்றி தாராளமாக) மேய்ந்துகொள்ளும்; மேலும் அதை எத்தகைய தீங்கும் கொண்டு தீண்டாதீர்கள்; (அவ்வாறு செய்தால்) துன்புறுத்தும் வேதனை உங்களைப் பிடித்துக் கொள்ளும்" என்று கூறினார்.

وَاذْكُرُوْا اِذْ جَعَلَكُمْ خُلَفَآءَ مِنْ بَعْدِ عَادٍ وَّبَوَّاَكُمْ
فِى الْاَرْضِ تَتَّخِذُوْنَ مِنْ سُهُوْلِهَا قُصُوْرًا وَّتَنْحِتُوْنَ
الْجِبَالَ بُيُوْتًا ۚ فَاذْكُرُوْا اٰلَآءَ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ
مُفْسِدِيْنَ ﴿٧٤﴾ قَالَ الْمَلَاُ الَّذِيْنَ اسْتَكْبَرُوْا مِنْ قَوْمِهٖ
لِلَّذِيْنَ اسْتُضْعِفُوْا لِمَنْ اٰمَنَ مِنْهُمْ اَتَعْلَمُوْنَ اَنَّ صٰلِحًا
مُّرْسَلٌ مِّنْ رَّبِّهٖ ؕ قَالُوْٓا اِنَّا بِمَآ اُرْسِلَ بِهٖ مُؤْمِنُوْنَ ﴿٧٥﴾
قَالَ الَّذِيْنَ اسْتَكْبَرُوْٓا اِنَّا بِالَّذِىْٓ اٰمَنْتُمْ بِهٖ
كٰفِرُوْنَ ﴿٧٦﴾ فَعَقَرُوا النَّاقَةَ وَعَتَوْا عَنْ اَمْرِ رَبِّهِمْ وَ
قَالُوْا يٰصٰلِحُ ائْتِنَا بِمَا تَعِدُنَآ اِنْ كُنْتَ مِنَ
الْمُرْسَلِيْنَ ﴿٧٧﴾ فَاَخَذَتْهُمُ الرَّجْفَةُ فَاَصْبَحُوْا فِىْ دَارِهِمْ
جٰثِمِيْنَ ﴿٧٨﴾ فَتَوَلّٰى عَنْهُمْ وَقَالَ يٰقَوْمِ لَقَدْ اَبْلَغْتُكُمْ
رِسَالَةَ رَبِّىْ وَنَصَحْتُ لَكُمْ وَلٰكِنْ لَّا تُحِبُّوْنَ النّٰصِحِيْنَ ﴿٧٩﴾
وَلُوْطًا اِذْ قَالَ لِقَوْمِهٖٓ اَتَاْتُوْنَ الْفَاحِشَةَ مَا سَبَقَكُمْ
بِهَا مِنْ اَحَدٍ مِّنَ الْعٰلَمِيْنَ ﴿٨٠﴾ اِنَّكُمْ لَتَاْتُوْنَ الرِّجَالَ
شَهْوَةً مِّنْ دُوْنِ النِّسَآءِ ؕ بَلْ اَنْتُمْ قَوْمٌ مُّسْرِفُوْنَ ﴿٨١﴾

74. "ஆது (கூட்டத்தாரு)க்குப் பின்னர் உங்களை அவன் பின்தோன்றல்களாக்கி வைத்ததையும், பூமியில் உங்களை வசிக்கச் செய்ததையும் நீங்கள் நினைத்துப் பாருங்கள்; நீங்கள் அதன் இலகுவான பூமியில் மாளிகைகளைக் கட்டிக் கொள்கின்றீர்கள்; மலைகளை வீடுகளாகக் குடைந்து அமைத்துக் கொள்கின்றீர்கள்; ஆகவே அல்லாஹ்வின் இவ்வருட்கொடைகளையெல்லாம் நீங்கள் நினைத்துப்பாருங்கள்; அன்றியும் பூமியில் குழப்பம் செய்பவர்களாக அலையாதீர்கள்" (என்றும் கூறினார்).

75. (அதற்கு) அவருடைய சமூகத்தாரில் கர்வங்கொண்டிருந்த பிரதானிகள், தங்களைவிட பலவீனமானவர்களென எண்ணப்பட்டிருந்த அவர்களில் விசுவாசங்கொண்டோரிடம் "நிச்சயமாக (இந்த) ஸாலிஹ் அவர் இரட்சகனால் அனுப்பப்பட்ட ஒரு தூதரென நீங்கள் உறுதியாக அறிவீர்களா?" என்று கேட்டார்கள்; அ(தற்க)வர்கள், " நிச்சயமாக நாங்கள் எதைக்கொண்டு அவர் அனுப்பப்பட்டாரோ அ(த்தூ)தை விசுவாசம் கொள்ளக்கூடியவர்கள் " என்று கூறினார்கள்

76. (அதற்கு) கர்வங்கொண்டிருந்தார்களே அவர்கள், (அவ் விசுவாசிகளிடம்) "நீங்கள் எதை விசுவாசங் கொண்டிருக்கிறீர்களோ அதை நிச்சயமாக நாங்கள் நிராகரிக்கக்கூடியவர்கள்" என்று கூறினார்கள்.

77. பின்னர், அந்த ஒட்டகத்தை அறுத்துவிட்டார்கள், தங்கள் இரட்சகனின் கட்டளையை மீறியும் விட்டனர்; இன்னும், (அவர்கள் ஸாலிஹிடம்) "ஸாலிஹே! நீர் (அல்லாஹ்வுடைய) தூதர்களில் (உள்ளவராக) இருந்தால், நீர் எங்களுக்கு வாக்களித்த(வேதனையான)தை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள் .

78. ஆகவே, (முன்னர் அவர்களுக்கு எச்சரிக்கப்பட்டு வந்த) பூகம்பம் அவர்களைப் பிடித்துக்கொண்டது; அதனால் அவர்கள் தங்கள் வீடுகளில் (இறந்து)குப்புற வீழ்ந்து கிடக்க, காலைப்பொழுதை அடைந்தனர்.

79. (அந்நேரத்தில் ஸாலிஹ் நபி) அவர்களைவிட்டும் திரும்பிக் கொண்டார்; மேலும், (அவர்களிடம்) " என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான் உங்களுக்கு என் இரட்சகனின் தூதையே எத்திவைத்தேன்; உங்களுக்கு நல்லுபதேசமும் செய்தேன்; எனினும், நீங்களோ நல்லுபதேசம் செய்பவர்களை நேசிப்பவர்களாக இல்லை" என்று கூறினார்.

80. " லூத்" தையும் (நம்முடைய தூதராக அவருடைய சமூகத்தார்க்கு நாம் அனுப்பிவைத்தோம்.) அவர் தம் சமூகத்தாரிடம், "மானக்கேடானதொரு காரியத்தை நீங்கள் செய்கின்றீர்களா? அகிலத்தாரில் எவரும் அதை(செய்வது) கொண்டு உங்களை முந்திவிடவில்லை" என்று கூறியதை (நினைவு கூருங்கள்.)

81 . "நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு (விட்டு) ஆண்களிடம் காம இச்சைக்காக(அதைத் தணித்துக் கொள்ள) வருகின்றீர்கள்; மாறாக நீங்கள் மிக்க வரம்பு மீறிய சமூகத்தவராகவே இருக்கின்றீர்கள்" (என்று கூறினார்).

وَمَا كَانَ جَوَابَ قَوْمِهِۦٓ إِلَّآ أَن قَالُوٓا۟ أَخْرِجُوهُم
مِّن قَرْيَتِكُمْ ۖ إِنَّهُمْ أُنَاسٌ يَتَطَهَّرُونَ ﴿٨٢﴾ فَأَنجَيْنَٰهُ
وَأَهْلَهُۥٓ إِلَّا ٱمْرَأَتَهُۥ كَانَتْ مِنَ ٱلْغَٰبِرِينَ ﴿٨٣﴾ وَأَمْطَرْنَا
عَلَيْهِم مَّطَرًا ۖ فَٱنظُرْ كَيْفَ كَانَ عَٰقِبَةُ ٱلْمُجْرِمِينَ ﴿٨٤﴾ ع ١٠ ٢ ١٧
وَإِلَىٰ مَدْيَنَ أَخَاهُمْ شُعَيْبًا ۗ قَالَ يَٰقَوْمِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ
مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُۥ ۖ قَدْ جَآءَتْكُم بَيِّنَةٌ مِّن
رَّبِّكُمْ ۖ فَأَوْفُوا۟ ٱلْكَيْلَ وَٱلْمِيزَانَ وَلَا تَبْخَسُوا۟ ٱلنَّاسَ
أَشْيَآءَهُمْ وَلَا تُفْسِدُوا۟ فِى ٱلْأَرْضِ بَعْدَ إِصْلَٰحِهَا ۚ
ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُم مُّؤْمِنِينَ ﴿٨٥﴾ وَلَا تَقْعُدُوا۟
بِكُلِّ صِرَٰطٍ تُوعِدُونَ وَتَصُدُّونَ عَن سَبِيلِ ٱللَّهِ
مَنْ ءَامَنَ بِهِۦ وَتَبْغُونَهَا عِوَجًا ۚ وَٱذْكُرُوٓا۟ إِذْ كُنتُمْ
قَلِيلًا فَكَثَّرَكُمْ ۖ وَٱنظُرُوا۟ كَيْفَ كَانَ عَٰقِبَةُ
ٱلْمُفْسِدِينَ ﴿٨٦﴾ وَإِن كَانَ طَآئِفَةٌ مِّنكُمْ ءَامَنُوا۟
بِٱلَّذِىٓ أُرْسِلْتُ بِهِۦ وَطَآئِفَةٌ لَّمْ يُؤْمِنُوا۟ فَٱصْبِرُوا۟
حَتَّىٰ يَحْكُمَ ٱللَّهُ بَيْنَنَا ۚ وَهُوَ خَيْرُ ٱلْحَٰكِمِينَ ﴿٨٧﴾

82. (அதற்கு) அவரது சமுதாயத்தினரின் பதில் "அவர்களை உங்கள் ஊரைவிட்டு வெளியேற்றிவிடுங்கள்; (காரணம்)நிச்சயமாக அவர்கள் மிக்க பரிசுத்தமான மனிதர்களாக இருக்(க விரும்பு)கிறார்கள்"என்று அவர்கள் கூறியதைத்தவிர (வேறெதுவாகவும்) இருக்கவில்லை.

83. எனவே, அவருடைய மனைவியைத் தவிர அவரையும்,(மற்ற) அவருடைய குடும்பத்தினரையும் காப்பாற்றினோம். (அவருடைய மனைவியாகிய) அவள் (அவரைப் பின்பற்றாது அழிந்து போவோரில் ஒருத்தியாக) பின்தங்கியவர்களுடன் இருந்துவிட்டாள்.

84. மேலும், அவர்கள்மீது நாம் (கல்) மாரியைப் பொழிவித்து (அவர்களை அழித்து) விட்டோம். ஆகவே, (இக்) குற்றவாளிகளின் (இறுதி) முடிவு எப்படி இருந்தது என்பதை(நபியே!) நீர் நோக்குவீராக!

85. இன்னும் "மத்யன்"(என்னும் நகர) வாசிகளிடம் அவர்களுடைய சகோதரர் "ஷுஐபை" (நம்முடைய தூதராக அனுப்பிவைத்தோம்). அவர், "என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; அவனைத் தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரியவேறு) நாயனில்லை; உங்கள் இரட்சகனிடமிருந்து திட்டமாக உங்களுக்குத் தெளிவான அத்தாட்சி வந்திருக்கின்றது; ஆகவே, அளவைப் பூர்த்தியாக அளந்து,எடையையும் சரியாக நிறுங்கள்;(நீங்கள் கொடுக்கவேண்டிய) மனிதர்களுடைய பொருட்களில் யாதொன்றை அவர்களுக்குக் குறைத்தும் விடாதீர்கள்; மேலும், பூமியில் (சமாதானம், அமைதிஏற்பட்டு) அது சீர்திருத்தம் அடைந்த பின்னர், குழப்பத்தை உண்டுபண்ணாதீர்கள்; நீங்கள் விசுவாசிகளாயின், இவைதாம் உங்களுக்கு நன்மையாக இருக்கும்" என்று கூறினார்.

86. மேலும்,"ஒவ்வொரு வழியிலும், பயமுறுத்துபவர்களாகவும், அல்லாஹ்வின் வழியைவிட்டும் அவனை விசுவாசங்கொண்டோரை தடுப்பவர்களாகவும் அதில் கோணலைத் தேடக் கூடியவர்களாகவும் அமராதீர்கள்; குறைவானவர்களாக நீங்கள் இருந்தபோது, உங்களை அவன் அதிகமாக ஆக்கிவைத்ததையும் (அல்லாஹ்வுக்கு நன்றி செய்வதற்காக) நீங்கள் நினைவு கூருங்கள்;பூமியில் குழப்பம் செய்துகொண்டலைந்தவர்களின் (இறுதி) முடிவு எப்படி இருந்தது என்பதையும் நீங்கள் (கவனித்துப்) பார்ப்பீர்களாக!"

87. "இன்னும் நான் எதைக் கொண்டு அனுப்பப்பட்டேனோ அதை உங்களில் ஒருசாரார் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தும், ஒருசாரார் விசுவாசங் கொள்ளாதவர்களாகவும் இருந்தால், (அப்போது) நமக்கு மத்தியில் அல்லாஹ் தீர்ப்பு வழங்கும்வரை பொறுமையாக இருங்கள்; அவனே தீர்ப்பு வழங்குவோரில் மிக்க மேலானவன்"(என்று கூறினார்).

قَالَ الْمَلَاُ الَّذِيْنَ اسْتَكْبَرُوْا مِنْ قَوْمِهٖ لَنُخْرِجَنَّكَ
يٰشُعَيْبُ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَكَ مِنْ قَرْيَتِنَاۤ اَوْ لَتَعُوْدُنَّ فِيْ مِلَّتِنَا ؕ
قَالَ اَوَلَوْ كُنَّا كٰرِهِيْنَ ۚ (٨٨) قَدِ افْتَرَيْنَا عَلَى اللّٰهِ كَذِبًا اِنْ عُدْنَا
فِيْ مِلَّتِكُمْ بَعْدَ اِذْ نَجّٰىنَا اللّٰهُ مِنْهَا ؕ وَمَا يَكُوْنُ لَنَاۤ اَنْ نَّعُوْدَ فِيْهَاۤ
اِلَّاۤ اَنْ يَّشَآءَ اللّٰهُ رَبُّنَا ؕ وَسِعَ رَبُّنَا كُلَّ شَيْءٍ عِلْمًا ؕ عَلَى اللّٰهِ
تَوَكَّلْنَا ؕ رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَبَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَاَنْتَ خَيْرُ
الْفٰتِحِيْنَ (٨٩) وَقَالَ الْمَلَاُ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَوْمِهٖ لَئِنِ اتَّبَعْتُمْ
شُعَيْبًا اِنَّكُمْ اِذًا لَّخٰسِرُوْنَ (٩٠) فَاَخَذَتْهُمُ الرَّجْفَةُ فَاَصْبَحُوْا
فِيْ دَارِهِمْ جٰثِمِيْنَ ۚۖۛ (٩١) الَّذِيْنَ كَذَّبُوْا شُعَيْبًا كَاَنْ لَّمْ يَغْنَوْا
فِيْهَا ۛۚ اَلَّذِيْنَ كَذَّبُوْا شُعَيْبًا كَانُوْا هُمُ الْخٰسِرِيْنَ (٩٢) فَتَوَلّٰى
عَنْهُمْ وَقَالَ يٰقَوْمِ لَقَدْ اَبْلَغْتُكُمْ رِسٰلٰتِ رَبِّيْ وَنَصَحْتُ لَكُمْ ۚ
فَكَيْفَ اٰسٰى عَلٰى قَوْمٍ كٰفِرِيْنَ (٩٣) وَمَاۤ اَرْسَلْنَا فِيْ قَرْيَةٍ مِّنْ نَّبِيٍّ
اِلَّاۤ اَخَذْنَاۤ اَهْلَهَا بِالْبَاْسَآءِ وَالضَّرَّآءِ لَعَلَّهُمْ يَضَّرَّعُوْنَ (٩٤)
ثُمَّ بَدَّلْنَا مَكَانَ السَّيِّئَةِ الْحَسَنَةَ حَتّٰى عَفَوْا وَّقَالُوْا قَدْ مَسَّ
اٰبَآءَنَا الضَّرَّآءُ وَالسَّرَّآءُ فَاَخَذْنٰهُمْ بَغْتَةً وَّهُمْ لَا يَشْعُرُوْنَ (٩٥)

مع ٤ عند المتقدمين ١٢ = ٩ ع

88. அவருடைய சமூகத்தினரில் கர்வங் கொண்டிருந்தார்களே அந்தப்பிரதானிகள், "ஷுஐபே! நிச்சயமாக நாம், உம்மையும் உம்முடன் விசுவாசித்தோரையும் நம்முடைய ஊரிலிருந்து வெளியேற்றி விடுவோம்; அல்லது நிச்சயமாக நீங்கள் நம்முடைய மார்க்கத்திற்குத் திரும்பிவிடவேண்டும்" என்று கூறினார்கள். அ(தற்க)வர் (அவர்களிடம், "உங்களுடைய மார்க்கத்தை) நாங்கள் வெறுப்பவர்களாக இருந்தபோதிலுமா?" என்று கேட்டார்.

89. (அன்றி,) "உங்கள் மார்க்கத்திற்கு _ அதிலிருந்து அல்லாஹ் எங்களைக் காப்பாற்றிவிட்டதன் பின்னர் _ நாங்கள் திரும்பினால், நிச்சயமாக அல்லாஹ்வின் மீது நாங்கள் பொய்யைப் புனைந்து கூறியவர்களாகிவிடுவோம்; எங்கள் இரட்சகனாகிய அல்லாஹ் நாடினாலன்றி, நாங்கள் அதன்பால் மீளுவதற்கு எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை; எங்கள் இரட்சகன் தன் அறிவால் எல்லாப்பொருட்களையும் சூழ்ந்திருக்கிறான். அல்லாஹ்வின் மீதே நாங்கள் (எங்களுடைய காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைத்துள்ளோம்." (என்று கூறி, ) "எங்கள் இரட்சகனே! எங்களுக்கும், எங்கள் சமூகத்தாருக்குமிடையில் நீ நியாயமான தீர்ப்பை வழங்குவாயாக ! நிச்சயமாக நீயே தீர்ப்பளிப்போரில் மிக்கமேலானவன்" (என்றும் பிரார்த்தித்தார்).

90. அவருடைய சமூகத்தாரில் நிராகரித்து விட்டார்களே அத்தகைய பிரதானிகள், (மற்றவர்களிடம்)" நீங்கள் ஷுஐபைப் பின்பற்றினால், அப்போது நிச்சயமாக நீங்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள்" என்று கூறினார்கள்.

91. ஆகவே, அவர்களை (மிக்க கொடூரமான) பூகம்பம் பிடித்துக் கொண்டது; அவர்கள் தங்கள் வீடுகளில் குப்புற வீழ்ந்து( இறந்து) கிடந்தவர்களாக காலைப்பொழுதை அடைந்தனர்.

92. ஷுஐபைப் பொய்யாக்கினார்களே அத்தகையவர்கள், அவற்றில்(தங்கள் வீடுகளில்) ஒருகாலத்திலுமே வசித்திராதவர்களைப் போலாகி (யாதோர் அடையாளமுமின்றி அழிந்து) விட்டனர். ஷுஐபைப் பொய்யாக்கினார்களே அத்தகையோர் _ அவர்களே (முற்றிலும்) நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிட்டார்கள்.

93. (அது சமயம் ஷுஐபாகிய) அவர் அவர்களைவிட்டும் திரும்பி, " என்னுடைய சமூகத்தாரே! நிச்சயமாக நான் என் இரட்சகனின் தூதுகளையே உங்களுக்கு (எடுத்துரைத்து) எத்திவைத்துவிட்டேன்; இன்னும் உங்களுக்கு நல்லுபதேசமும் செய்துவிட்டேன்; ஆகவே, (அதனை) நிராகரித்துவிட்ட சமூகத்தாரின்மீது நான் எவ்வாறு கவலைப்படுவேன்" என்று கூறினார் .

94. மேலும், எந்த ஊரிலும் அவ்வூர்வாசிகளை, அவர்கள் பணிந்து வருவதற்காக வறுமையாலும், பிணியாலும் நாம் அவர்களை பிடித்தே தவிர எந்த நபியையும் நாம் அனுப்பவில்லை.

95. பின்னர் நாம் (வறுமை, பிணிபோன்ற) தீயதின் இடத்தில் நல்லதை மாற்றிக்கொடுத்தோம்; முடிவாக (பல்கிப் பெருகி) அதிகமானவர்களாகிவிட்ட அவர்கள்: "நம்முடைய மூதாதையர்களுக்குமே இத்தகைய சுக, துக்கம் ஏற்பட்டிருக்கின்றது" என்று (தாங்கள் அனுபவித்துவரும் இவையாவும் காலத்தின் ஏற்றத்தாழ்வினால் ஏற்பட்டதே என அலட்சியமாகக்) கூறினார்கள்; ஆதலால், அவர்கள் (ஒருசிறிதும்) உணர்ந்துகொள்ளாதவிதத்தில் (வேதனையைக் கொண்டு) திடீரென அவர்களை நாம் பிடித்துக் கொண்டோம்.

وَلَوْ اَنَّ اَهْلَ الْقُرٰۤى اٰمَنُوْا وَاتَّقَوْا لَفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكٰتٍ
مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ وَلٰكِنْ كَذَّبُوْا فَاَخَذْنٰهُمْ بِمَا
كَانُوْا يَكْسِبُوْنَ ﴿٩٦﴾ اَفَاَمِنَ اَهْلُ الْقُرٰۤى اَنْ يَّاْتِيَهُمْ
بَاْسُنَا بَيَاتًا وَّهُمْ نَآىِٕمُوْنَ ؕ ﴿٩٧﴾ اَوَاَمِنَ اَهْلُ الْقُرٰۤى اَنْ
يَّاْتِيَهُمْ بَاْسُنَا ضُحًى وَّهُمْ يَلْعَبُوْنَ ﴿٩٨﴾ اَفَاَمِنُوْا مَكْرَ اللّٰهِ ۚ
فَلَا يَاْمَنُ مَكْرَ اللّٰهِ اِلَّا الْقَوْمُ الْخٰسِرُوْنَ ۧ ﴿٩٩﴾ اَوَلَمْ يَهْدِ ١٢ ع ٢
لِلَّذِيْنَ يَرِثُوْنَ الْاَرْضَ مِنْۢ بَعْدِ اَهْلِهَآ اَنْ لَّوْ نَشَآءُ
اَصَبْنٰهُمْ بِذُنُوْبِهِمْ ۚ وَنَطْبَعُ عَلٰى قُلُوْبِهِمْ فَهُمْ لَا يَسْمَعُوْنَ ﴿١٠٠﴾
تِلْكَ الْقُرٰى نَقُصُّ عَلَيْكَ مِنْ اَنْۢبَآىِٕهَا ۚ وَلَقَدْ جَآءَتْهُمْ
رُسُلُهُمْ بِالْبَيِّنٰتِ ۚ فَمَا كَانُوْا لِيُؤْمِنُوْا بِمَا كَذَّبُوْا مِنْ قَبْلُ ؕ
كَذٰلِكَ يَطْبَعُ اللّٰهُ عَلٰى قُلُوْبِ الْكٰفِرِيْنَ ﴿١٠١﴾ وَمَا وَجَدْنَا
لِاَكْثَرِهِمْ مِّنْ عَهْدٍ ۚ وَاِنْ وَّجَدْنَآ اَكْثَرَهُمْ لَفٰسِقِيْنَ ﴿١٠٢﴾
ثُمَّ بَعَثْنَا مِنْۢ بَعْدِهِمْ مُّوْسٰى بِاٰيٰتِنَآ اِلٰى فِرْعَوْنَ وَمَلَا۟ىِٕهٖ
فَظَلَمُوْا بِهَا ۚ فَانْظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِيْنَ ﴿١٠٣﴾ وَ
قَالَ مُوْسٰى يٰفِرْعَوْنُ اِنِّيْ رَسُوْلٌ مِّنْ رَّبِّ الْعٰلَمِيْنَ ۙ ﴿١٠٤﴾

96. மேலும், அவ்வூர்களை உடையவர்கள் விசுவாசங்கொண்டு (அல்லாஹ்வுக்குப்) பயந்தும் நடந்திருந்தால், அவர்களுக்காக வானத்திலும், பூமியிலும் உள்ள பாக்கியங்(களின் வாசல்)களை நாம் திறந்து விட்டிருப்போம்; எனினும், அவர்கள் (நபிமார்களை விசுவாசிக்காது) பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் சம்பாதித்துக் கொண்ட (பாவத்)தின் காரணமாக நாம் (வேதனையைக் கொண்டு) அவர்களைப் பிடித்துக் கொண்டோம்.

97. (நபியே! நிராகரித்த) அவ்வூர்களை உடையவர்கள் (தங்கள் வீடுகளில்) இரவில் அவர்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும் நிலையில், நம்முடைய வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றி அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

98. அல்லது (நிராகரித்த) அவ்வூர்களை உடையவர்கள் (கவலையற்று) முற்பகலில் விளையாடிக் கொண்(டு பராமுகமாக அவர்கள் காரியங்களில் ஈடுபட்)டிருக்கும் நிலையில், நம்முடைய வேதனை அவர்களிடம் வந்து விடுவதைப் பற்றி அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?

99. அல்லாஹ்வின் சூழ்ச்சியை அவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா? (முற்றிலும்) நஷ்டமடையக்கூடிய சமூகத்தாரைத் தவிர (எவரும்,) அல்லாஹ்வின் சூழ்ச்சியை அச்சமற்றிருக்கமாட்டார்கள்.

100. பூமியை _ அதை உடையவர்களுக்குப் பின்னர் _ வாரிசாக அடைந்தோருக்கு_ நாம் நாடினால், இவர்களுடைய பாவங்களின் காரணமாக இவர்களையும், (அவ்வாறே) பிடித்திருப்போம் என்ற விஷயம் இவர்களுக்கு விளங்கவில்லையா? மேலும் நாம் இவர்களுடைய இதயங்களின் மீது முத்திரையிட்டுவிடுகிறோம்; ஆகவே, இவர்கள் (நல்லுபதேசங்களைச்) செவியேற்க மாட்டார்கள்.

101. (நபியே!) அந்த ஊர்கள் _ அவற்றின் (வரலாற்றுச்) செய்திகளை நாம் உமக்கு(விவரித்துக்) கூறுகின்றோம். (அவற்றில் வசித்திருந்த) அவர்களுக்கு (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட தூதர்கள், அவர்களிடம் திட்டமாகத் தெளிவான அத்தாட்சிகளையே கொண்டு வந்தனர்; (ஆயினும்,) அவர்களோ, முன்னர் பொய்யாக்கிய காரணத்தினால் விசுவாசங் கொள்பவர்களாக இருக்கவில்லை; இவ்வாறே நிராகரிப்போரின் இதயங்களின் மீது அல்லாஹ் முத்திரையிட்டு விடுகின்றான்.

102. அவர்களில் பெரும்பாலோருக்கு, எந்த வாக்குறுதி(யை)யும் (நிறைவேற்றும் தன்மை) இருப்பதாகவும் நாம் காணவில்லை; அன்றியும், நிச்சயமாக நாம் அவர்களில் பெரும்பாலோரைப் பாவிகளாகவே கண்டோம்.

103. (நபிமார்களாகிய நூஹ், ஹூத், ஸாலிஹ், ஷுஐப்) அவர்களுக்குப் பின்னர் மூஸாவை நம் அத்தாட்சிகளுடன் ஃபிர்அவ்னிடமும், அவனுடைய பிரதானிகளிடமும் நாம் அனுப்பிவைத்தோம்; (ஆயினும்,) அவர்கள் அவற்றை நிராகரித்து (அநியாயம் செய்து) விட்டனர்; ஆகவே, (இத்தகைய) குழப்பக்காரர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக!

104. மேலும், மூஸா (ஃபிர்அவ்னிடம்,) "ஃபிர்அவ்னே! நிச்சயமாக நான் அகிலத்தாரின் இரட்சகனால் (உன்னிடம்) அனுப்பப்பட்ட ஒரு தூதன்" என்று கூறினார்.

حَقِيْقٌ عَلٰٓى اَنْ لَّآ اَقُوْلَ عَلَى اللّٰهِ اِلَّا الْحَقَّ ؕ قَدْ جِئْتُكُمْ بِبَيِّنَةٍ
مِّنْ رَّبِّكُمْ فَاَرْسِلْ مَعِىَ بَنِىْٓ اِسْرَآءِيْلَ ؕ ﴿١٠٥﴾ قَالَ اِنْ كُنْتَ جِئْتَ
بِاٰيَةٍ فَاْتِ بِهَآ اِنْ كُنْتَ مِنَ الصّٰدِقِيْنَ ﴿١٠٦﴾ فَاَلْقٰى عَصَاهُ
فَاِذَا هِىَ ثُعْبَانٌ مُّبِيْنٌ ۚۖ ﴿١٠٧﴾ وَّنَزَعَ يَدَهٗ فَاِذَا هِىَ بَيْضَآءُ
لِلنّٰظِرِيْنَ ﴿١٠٨﴾ ع قَالَ الْمَلَاُ مِنْ قَوْمِ فِرْعَوْنَ اِنَّ هٰذَا لَسٰحِرٌ ع ١٣ ٤
عَلِيْمٌ ﴿١٠٩﴾ لا يُّرِيْدُ اَنْ يُّخْرِجَكُمْ مِّنْ اَرْضِكُمْ ۚ فَمَاذَا تَاْمُرُوْنَ ﴿١١٠﴾
قَالُوْٓا اَرْجِهْ وَاَخَاهُ وَاَرْسِلْ فِى الْمَدَآئِنِ حٰشِرِيْنَ ﴿١١١﴾ لا يَاْتُوْكَ
بِكُلِّ سٰحِرٍ عَلِيْمٍ ﴿١١٢﴾ وَجَآءَ السَّحَرَةُ فِرْعَوْنَ قَالُوْٓا اِنَّ لَنَا لَاَجْرًا
اِنْ كُنَّا نَحْنُ الْغٰلِبِيْنَ ﴿١١٣﴾ قَالَ نَعَمْ وَاِنَّكُمْ لَمِنَ الْمُقَرَّبِيْنَ ﴿١١٤﴾
قَالُوْا يٰمُوْسٰٓى اِمَّآ اَنْ تُلْقِىَ وَاِمَّآ اَنْ نَّكُوْنَ نَحْنُ الْمُلْقِيْنَ ﴿١١٥﴾
قَالَ اَلْقُوْا ۚ فَلَمَّآ اَلْقَوْا سَحَرُوْٓا اَعْيُنَ النَّاسِ وَاسْتَرْهَبُوْهُمْ
وَجَآءُوْ بِسِحْرٍ عَظِيْمٍ ﴿١١٦﴾ وَاَوْحَيْنَآ اِلٰى مُوْسٰٓى اَنْ اَلْقِ عَصَاكَ ۚ
فَاِذَا هِىَ تَلْقَفُ مَا يَاْفِكُوْنَ ﴿١١٧﴾ ۚ فَوَقَعَ الْحَقُّ وَبَطَلَ مَا
كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١١٨﴾ ۚ فَغُلِبُوْا هُنَالِكَ وَانْقَلَبُوْا صٰغِرِيْنَ ﴿١١٩﴾ ۚ وَ
اُلْقِىَ السَّحَرَةُ سٰجِدِيْنَ ﴿١٢٠﴾ ۖ قَالُوْٓا اٰمَنَّا بِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٢١﴾ لا

105. (அன்றி) "நான், அல்லாஹ்வின்மீது உண்மையையன்றி (வேறு எதையும்) கூறாமலிருப்பது (என்மீது) கடமையாகும்; உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான அத்தாட்சியை திட்டமாக நான் உங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன்; ஆதலால், நீ (அடிமைப்படுத்தி வைத்திருக்கும்) இஸ்ராயீலின் மக்களை என்னுடன் அனுப்பிவை" (என்றும் அவர் கூறினார்).

106. அ(தற்க)வன், "நீர் ஏதேனும் அத்தாட்சியைக் கொண்டு வந்திருந்தால் (அதுபற்றி) நீர் உண்மையாளர்களில் இருந்தால் அதனை நீர் கொண்டுவாரும்" என்று கூறினான்.

107. அப்போது அவர் தன் கைத்தடியை போட்டார்; அதே சமயம் அது தெளிவான பெரிய(தொரு) பாம்பாகிவிட்டது.

108. அன்றியும் அவர் தன்னுடைய கையை(ச் சட்டைப் பையிலிட்டு) வெளியில் எடுத்தார்; அதேசமயம் அது பார்ப்போருக்கு வெண்மையானதாக(வும் பிரகாசமானதாகவும்) இருந்தது.

109. (இதனைக்கண்ட)ஃபிர்அவ்னுடைய சமூகத்தாரைச்சேர்ந்த பிரதானிகள் "நிச்சயமாக இவர் மிக அறிந்த சூனியக்காரர்" என்று கூறினார்கள்.

110. "அவர் உங்களை உங்களுடைய பூமியிலிருந்து (நாட்டிலிருந்து) வெளியேற்றிவிட நாடுகிறார்; ஆகவே, இதைப்பற்றி நீங்கள் எதைக் கட்டளையிடுகிறீர்கள்?" (என்று ஃபிர்அவ்ன் கேட்டான்.)

111. அ(தற்க)வர்கள், "அவருக்கும், அவருடைய சகோதரருக்கும் தவணை கொடுத்துவிட்டு, பல பட்டணங்களுக்கு (சூனியக்காரர்களைத்) திரட்டிக் கொண்டு வருபவர்களை அனுப்பிவை" என்று கூறினார்கள்

112. "அவர்கள், நன்கறிந்த ஒவ்வொரு சூனியக்காரரையும் உம்மிடம் (அழைத்துக்)கொண்டு வருவார்கள்" (என்றும் கூறினார்கள்.)

113. (அவ்வாறு அனுப்பியதில் பல திசைகளிலும் இருந்த) சூனியக்காரர்கள் ஃபிர்அவ்னிடம் வந்து "நாங்கள் (மூஸாவை) வென்றவர்களாக ஆகிவிட்டால், நிச்சயமாக எங்களுக்கு(அதற்குரிய) வெகுமதி உண்டா?" என்று கேட்டனர்.

114. அதற்கவன், "ஆம்! (உங்களுக்கு வெகுமதி உண்டு)மேலும் நிச்சயமாக நீங்கள் (எம் சபையில் எமக்கு மிக்க) நெருக்கமாக்கப்பட்டவர்களிலுமிருப்பீர்கள்" என்று கூறினான்.

115. (பின்னர் அச்சூனியக்காரர்கள்) "மூஸாவே! (முதலில்) நீர் போடுகிறீரா? அல்லது (முதலில்) போடுபவர்களாக நாங்கள் இருக்கட்டுமா?" என்று கேட்டனர்.

116. (அதற்கு) மூஸா, "நீங்களே (முதலில்) போடுங்கள்" என்று கூறினார்; அவ்வாறு அவர்கள் (தங்களது கைத்தடிகளை) போட்டபோது அதனால் மனிதர்களுடைய கண்களை(க் கட்டி) சூனியம் செய்தனர்; அவர்களைத் திடுக்கிடும்படியும் செய்துவிட்டனர்; இன்னும் மகத்தான சூனியத்தை அவர்கள் கொண்டு வந்து விட்டனர்.

117. (அது சமயம்) நாம், "மூஸாவுக்கு நீர் உம்முடைய கைத்தடியை போடும்" என்றும் வஹீ அறிவித்தோம்; (அவ்வாறு அவர் போடவே,) உடனே அது (பெரியதொரு பாம்பாகி) அவர்கள் (சூனியத்தால்) கற்பனை செய்தவற்றை விழுங்கிவிட்டது.

118. ஆகவே உண்மை வெளிப்பட்டுவிட்டது, அவர்கள் செய்து கொண்டிருந்தவை (யாவும்) வீணாகியும் விட்டது.

119. ஆகவே, (கர்வங்கொண்டிருந்த) அவர்கள் அங்கேயே வெற்றி கொள்ளப்பட்டனர்; அவர்கள் சிறுமையடைந்தவர்களாகவும் திரும்பினார்கள்.

120. அன்றியும், அச்சூனியக்காரர்கள் சிரம்பணிந்தவர்களாக (க்கீழே) வீழ்த்தப்பட்டனர்.

121. "அகிலத்தாரின் இரட்சகனை நாங்கள் ஈமான்(விசுவாசம்) கொண்டுவிட்டோம்" என்று கூறினார்கள்.

رَبِّ مُوْسٰى وَ هٰرُوْنَ ﴿١٢٢﴾ قَالَ فِرْعَوْنُ اٰمَنْتُمْ بِهٖ قَبْلَ اَنْ
اٰذَنَ لَكُمْ ۚ اِنَّ هٰذَا لَمَكْرٌ مَّكَرْتُمُوْهُ فِي الْمَدِيْنَةِ لِتُخْرِجُوْا مِنْهَآ
اَهْلَهَا ۚ فَسَوْفَ تَعْلَمُوْنَ ﴿١٢٣﴾ لَاُقَطِّعَنَّ اَيْدِيَكُمْ وَ اَرْجُلَكُمْ
مِّنْ خِلَافٍ ثُمَّ لَاُصَلِّبَنَّكُمْ اَجْمَعِيْنَ ﴿١٢٤﴾ قَالُوْۤا اِنَّاۤ اِلٰى رَبِّنَا
مُنْقَلِبُوْنَ ۚ ﴿١٢٥﴾ وَ مَا تَنْقِمُ مِنَّاۤ اِلَّاۤ اَنْ اٰمَنَّا بِاٰيٰتِ رَبِّنَا لَمَّا
جَآءَتْنَا ؕ رَبَّنَاۤ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ ۧ ﴿١٢٦﴾ وَ قَالَ ع ١٤ ١٨ ١٤
الْمَلَاُ مِنْ قَوْمِ فِرْعَوْنَ اَتَذَرُ مُوْسٰى وَ قَوْمَهٗ لِيُفْسِدُوْا
فِي الْاَرْضِ وَ يَذَرَكَ وَ اٰلِهَتَكَ ؕ قَالَ سَنُقَتِّلُ اَبْنَآءَهُمْ
وَ نَسْتَحْيٖ نِسَآءَهُمْ ۚ وَ اِنَّا فَوْقَهُمْ قٰهِرُوْنَ ﴿١٢٧﴾ قَالَ مُوْسٰى
لِقَوْمِهِ اسْتَعِيْنُوْا بِاللّٰهِ وَ اصْبِرُوْا ۚ اِنَّ الْاَرْضَ لِلّٰهِ ۙ۫
يُوْرِثُهَا مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ؕ وَ الْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ﴿١٢٨﴾
قَالُوْۤا اُوْذِيْنَا مِنْ قَبْلِ اَنْ تَاْتِيَنَا وَ مِنْۢ بَعْدِ مَا جِئْتَنَا ؕ
قَالَ عَسٰى رَبُّكُمْ اَنْ يُّهْلِكَ عَدُوَّكُمْ وَ يَسْتَخْلِفَكُمْ فِي
الْاَرْضِ فَيَنْظُرَ كَيْفَ تَعْمَلُوْنَ ۧ ﴿١٢٩﴾ وَ لَقَدْ اَخَذْنَاۤ اٰلَ ع ١٥ ١٩ ٥
فِرْعَوْنَ بِالسِّنِيْنَ وَ نَقْصٍ مِّنَ الثَّمَرٰتِ لَعَلَّهُمْ يَذَّكَّرُوْنَ ﴿١٣٠﴾

122. (அவனே) மூஸாவிற்கும், ஹாரூனுக்கும் இரட்சகன்" (என்று கூறினார்கள்).

123. (அதற்கு) ஃபிர் அவ்ன், "உங்களுக்கு நான் அனுமதியளிப்பதற்கு முன்னதாகவே நீங்கள் (மூஸா, ஹாரூனுடைய இரட்சகனாகிய) அவனை விசுவாசங்கொண்டு விட்டீர்கள்? நிச்சயமாக இது ஒரு சதியாகும். இந்நகரத்தில் அதற்குரியவர்களை அதிலிருந்து நீங்கள் வெளியேற்றுவதற்காக இதை நீங்கள் செய்திருக்கிறீர்கள் ; ஆகவே (இச்சதியின் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்று கூறினான்.

124. "நிச்சயமாக நான் உங்களுடைய கைகளையும், உங்களுடைய கால்களையும் மாறாக (ஒரு பக்கத்துக் காலையும் மறுபக்கத்துக் கையையும்) துண்டித்து விடுவேன்; அதன்பின் உங்கள் யாவரையும் கழுவேற்றுவேன்" என்று கூறினான்.

125. அ(தற்க)வர்கள், (அவ்வாறாயின்) "நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகனின் பால் திரும்பிச் செல்லக் கூடியவர்கள் (அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை)" என்று கூறினார்கள்.

126. எங்கள் இரட்சகனின் அத்தாட்சிகளை — அவை எங்களிடம் வந்த போது நாங்கள் ஈமான் கொண்டுவிட்டோம் என்பதற்கல்லாது நீ எங்களைத் தண்டிக்கவில்லை ; (என்று கூறிவிட்டு) "எங்கள் இரட்சகனே! எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! இன்னும் (உனக்கு) முற்றிலும் கீழ்ப்பட்டவர்களாக (எங்களை ஆக்கி) நீ எங்க(ள் உயிர்க)ளைக் கைப்பற்றிக் கொள்வாயாக!" (என்றும் பிரார்த்தித்தார்கள்)

127. இன்னும், ஃபிர் அவ்னுடைய சமூகப்பிரதானிகள் (ஃபிர் அவ்னிடம்,) "மூஸாவையும், அவருடைய சமூகத்தாரையும் பூமியில் குழப்பம் செய்வதற்காகவும், உம்மையும், உம் தெய்வங்களையும் (புறக்கணித்து) விட்டுவிடுவதற்காகவும் நீர் அவர்களை விட்டு வைப்பீரா?" என்று கேட்டார்கள்; அ(தற்க)வன், "(அன்று) அவர்களுடைய ஆண் மக்களை வெட்டிக் கொன்று விடுவோம்; அவர்களுடைய பெண் மக்களை (மட்டும்) உயிருடன் வாழவும் விடுவோம்; இன்னும் நிச்சயமாக நாம் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள்" என்று கூறினான்.

128. (அதற்கு) மூஸா தன் சமூகத்தாரிடம், "நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்; இன்னும், பொறுமையாகவுமிருங்கள் சகித்திருங்கள்; நிச்சயமாக இந்தப்பூமி அல்லாஹ்வுக்கே உரியது; இதனை அவன் தன் அடியார்களில், தான் நாடியவர்களுக்கு (உரிமைப்படுத்தி) அனந்தரமாக்கி விடுவான்; (நல்ல) முடிவு (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகிறவர்களுக்கே" என்று கூறினார்.

129. (அதற்கு மூஸாவுடைய சமூகத்தார் அவரிடம்,) "நீர் நம்மிடம் வருவதற்கு முன்னரும் நாங்கள் துன்புறுத்தப்பட்டோம்; நீர் வந்ததன் பின்னரும் (துன்புறுத்தப்பட்டே வருகின்றோம்;)" என்று அவர்கள் கூறினார்கள்; (அதற்கு மூஸா,) "உங்களுடைய இரட்சகன் உங்களுடைய விரோதிகளை அழித்து, (அவர்களுடைய) பூமிக்கு உங்களை பின்தோன்றல்களாக்கி வைக்கக்கூடும்; அப்பால் நீங்கள் எவ்வாறு செயலாற்றுகிறீர்கள் என்பதைக் கவனிப்பான்" என்று கூறினார்.

130. மேலும், ஃபிர் அவ்னைச் சார்ந்தவர்களை — அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக பஞ்சங்களைக் கொண்டும், காய்கனிப் பொருள்களில் குறைவைக் கொண்டும் திட்டமாக நாம் பிடித்தோம்.

فَاِذَا جَآءَتْهُمُ الْحَسَنَةُ قَالُوْا لَنَا هٰذِهٖ ۚ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌ
يَّطَّيَّرُوْا بِمُوْسٰى وَمَنْ مَّعَهٗ ؕ اَلَاۤ اِنَّمَا طٰٓئِرُهُمْ عِنْدَ اللّٰهِ
وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ ﴿۱۳۱﴾ وَقَالُوْا مَهْمَا تَاْتِنَا بِهٖ
مِنْ اٰيَةٍ لِّتَسْحَرَنَا بِهَا ۙ فَمَا نَحْنُ لَكَ بِمُؤْمِنِيْنَ ﴿۱۳۲﴾ فَاَرْسَلْنَا
عَلَيْهِمُ الطُّوْفَانَ وَالْجَرَادَ وَالْقُمَّلَ وَالضَّفَادِعَ وَالدَّمَ اٰيٰتٍ
مُّفَصَّلٰتٍ ۫ فَاسْتَكْبَرُوْا وَكَانُوْا قَوْمًا مُّجْرِمِيْنَ ﴿۱۳۳﴾ وَلَمَّا
وَقَعَ عَلَيْهِمُ الرِّجْزُ قَالُوْا يٰمُوْسَى ادْعُ لَنَا رَبَّكَ بِمَا عَهِدَ
عِنْدَكَ ۚ لَئِنْ كَشَفْتَ عَنَّا الرِّجْزَ لَنُؤْمِنَنَّ لَكَ وَلَنُرْسِلَنَّ
مَعَكَ بَنِيْۤ اِسْرَآءِيْلَ ﴿۱۳۴﴾ ۚ فَلَمَّا كَشَفْنَا عَنْهُمُ الرِّجْزَ اِلٰۤى
اَجَلٍ هُمْ بٰلِغُوْهُ اِذَا هُمْ يَنْكُثُوْنَ ﴿۱۳۵﴾ فَانْتَقَمْنَا مِنْهُمْ
فَاَغْرَقْنٰهُمْ فِى الْيَمِّ بِاَنَّهُمْ كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَكَانُوْا عَنْهَا
غٰفِلِيْنَ ﴿۱۳۶﴾ وَاَوْرَثْنَا الْقَوْمَ الَّذِيْنَ كَانُوْا يُسْتَضْعَفُوْنَ
مَشَارِقَ الْاَرْضِ وَمَغَارِبَهَا الَّتِىْ بٰرَكْنَا فِيْهَا ؕ وَتَمَّتْ كَلِمَتُ
رَبِّكَ الْحُسْنٰى عَلٰى بَنِىْۤ اِسْرَآءِيْلَ ۙ۬ بِمَا صَبَرُوْا ؕ وَدَمَّرْنَا
مَا كَانَ يَصْنَعُ فِرْعَوْنُ وَقَوْمُهٗ وَمَا كَانُوْا يَعْرِشُوْنَ ﴿۱۳۷﴾ الربع

131. பின்னர், அவர்களுக்கு (யாதொரு) நன்மை வருமானால், இது எங்களுக்கே உரியது எனக் கூறுகிறார்கள்; மேலும், அவர்களுக்கு தீமை ஏற்படுமானால், மூஸாவையும், அவருடனிருப்பவர்களையும்(கொண்டு ஏற்பட்ட) துர்ச்சகுனம் என்பார்கள். அவர்களுடைய துர்ச்சகுனமெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே (வந்து) உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்; எனினும், அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்துகொள்வதில்லை.

132. அன்றியும், அவர்கள் (மூஸாவிடம்,) "அவற்றின் மூலம் நீர் எங்களை வசியப்படுத்துவதற்காக,எவ்வளவு (அற்புதமான) அத்தாட்சியை நீர் (எங்களுக்குக்) கொண்டுவந்த போதிலும், நாங்கள் உம்மை விசுவாசிக்கக்கூடியவர்களாக இல்லை" என்று கூறினார்கள்.

133. ஆகவே, அவர்கள்மீது (மழையுடன்கூடிய) புயல் காற்று, வெட்டுக்கிளி, பேன், தவளைகள், இரத்தம் ஆகியவற்றை தெளிவான அத்தாட்சிகளாக (ஒன்றன் பின் ஒன்றாக) நாம் அனுப்பிவைத்தோம்; (இதன் பின்னரும்) அவர்கள், கர்வங்கொண்டார்கள்; குற்றம் செய்யும் சமூகத்தாராகவும் அவர்கள் இருந்தார்கள்.

134. அவர்களின் மீது(வானத்திலிருந்து) வேதனை வரும்போதெல்லாம் அவர்கள் (மூஸாவிடம்,)" மூஸாவே! உமதிரட்சகனிடம் அவன் உமக்கு அளித்திருக்கும் வாக்குறுதியின் பிரகாரம், (இக்கஷ்டத்தை நீக்கும்படி) எங்களுக்காக நீர் பிரார்த்தனை செய்வீராக; எங்களை விட்டும் இவ்வேதனையை நீர் நீக்கிவிட்டால், நிச்சயமாக நாங்கள் உம்மை விசுவாசித்து, இஸ்ராயீலின் மக்களையும் நிச்சயமாக நாம் உம்முடன் அனுப்பி விடுவோம்" என்றும் கூறினார்கள்.

135. ஆகவே, அதை அவர்கள் சென்றடையும் ஒரு தவணை வரை அவர்களைவிட்டும் வேதனையை நாம் நீக்கியபொழுது, அச்சமயம் அவர்கள்(தாம் அளித்த வாக்குறுதியை) முறித்துவிடுகின்றனர்.

136. ஆகவே, நிச்சயமாக அவர்கள் நம்முடைய அத்தாட்சிகளைப் பொய்யாக்கி, (அவற்றைப் பொருட்படுத்தாது) மறதியாளர்களாகவும் அவர்கள் இருந்ததன் காரணமாக அவர்களை நாம் தண்டித்தோம்; (அப்போது) அவர்களைக் கடலில் மூழ்கடித்தும் விட்டோம்.

137. இன்னும், பலமற்றவர்கள் எனக்கருதப்பட்டிருந்தார்களே அத்தகைய சமூகத்தவரை ,எதில் நாம்பெரும் பாக்கியங்களை நல்கியிருந்தோமோ அத்தகைய பூமியின் கிழக்குப்பகுதிகளுக்கும், அதன் மேற்குப்பகுதிகளுக்கும் நாம் வாரிசுகளாக்கினோம்; மேலும், இஸ்ராயீலின் மக்கள் மீது (ஃபிர்அவ்னால் ஏற்பட்ட கஷ்டங்களைப்) பொறுமையுடன் அவர்கள் (சகித்துக்கொண்டு) இருந்ததன் காரணமாக உம் இரட்சகனின் அழகிய வாக்கு பரிபூரணமாகி (நிறைவேறி) விட்டது; மேலும் பிர்அவ்னும், அவனுடைய சமூகத்தாரும் (மாடமாளிகைகளாக) உற்பத்தி செய்திருந்தவைகளையும், (மிக உயர்வாகக்கட்டி) அவர்கள் உயர்த்தியிருந்தவைகளையும் நாம் தரைமட்டமாக்கிவிட்டோம்.

وَجٰوَزْنَا بِبَنِيْٓ اِسْرَآءِيْلَ الْبَحْرَ فَاَتَوْا عَلٰى قَوْمٍ يَّعْكُفُوْنَ
عَلٰٓى اَصْنَامٍ لَّهُمْ ۚ قَالُوْا يٰمُوْسَى اجْعَلْ لَّنَآ اِلٰهًا كَمَا لَهُمْ
اٰلِهَةٌ ؕ قَالَ اِنَّكُمْ قَوْمٌ تَجْهَلُوْنَ ﴿١٣٨﴾ اِنَّ هٰٓؤُلَآءِ مُتَبَّرٌ مَّا هُمْ
فِيْهِ وَبٰطِلٌ مَّا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١٣٩﴾ قَالَ اَغَيْرَ اللّٰهِ اَبْغِيْكُمْ
اِلٰهًا وَّهُوَ فَضَّلَكُمْ عَلَى الْعٰلَمِيْنَ ﴿١٤٠﴾ وَاِذْ اَنْجَيْنٰكُمْ مِّنْ اٰلِ
فِرْعَوْنَ يَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ ۚ يُقَتِّلُوْنَ اَبْنَآءَكُمْ وَ
يَسْتَحْيُوْنَ نِسَآءَكُمْ ؕ وَفِيْ ذٰلِكُمْ بَلَآءٌ مِّنْ رَّبِّكُمْ عَظِيْمٌ ﴿١٤١﴾ ع
وَوٰعَدْنَا مُوْسٰى ثَلٰثِيْنَ لَيْلَةً وَّاَتْمَمْنٰهَا بِعَشْرٍ فَتَمَّ
مِيْقَاتُ رَبِّهٖٓ اَرْبَعِيْنَ لَيْلَةً ۚ وَقَالَ مُوْسٰى لِاَخِيْهِ
هٰرُوْنَ اخْلُفْنِيْ فِيْ قَوْمِيْ وَاَصْلِحْ وَلَا تَتَّبِعْ سَبِيْلَ
الْمُفْسِدِيْنَ ﴿١٤٢﴾ وَلَمَّا جَآءَ مُوْسٰى لِمِيْقَاتِنَا وَكَلَّمَهٗ رَبُّهٗ ۙ قَالَ
رَبِّ اَرِنِيْٓ اَنْظُرْ اِلَيْكَ ؕ قَالَ لَنْ تَرٰىنِيْ وَلٰكِنِ انْظُرْ اِلَى
الْجَبَلِ فَاِنِ اسْتَقَرَّ مَكَانَهٗ فَسَوْفَ تَرٰىنِيْ ۚ فَلَمَّا تَجَلّٰى
رَبُّهٗ لِلْجَبَلِ جَعَلَهٗ دَكًّا وَّخَرَّ مُوْسٰى صَعِقًا ۚ فَلَمَّآ اَفَاقَ
قَالَ سُبْحٰنَكَ تُبْتُ اِلَيْكَ وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ ﴿١٤٣﴾

138. மேலும் நாம் இஸ்ராயீலின் மக்களைக் கடலைக் கடந்து செல்லவைத்தோம்; (அப்போது) தங்களுக்குரிய விக்கிரகங்களை ஆராதனை செய்து கொண்டிருந்த ஒரு சமூகத்தினர் அருகில் அவர்கள் வந்தடைந்தனர்; (அப்போது, மூஸாவிடம்) "மூஸாவே! அவர்களுக்கு தெய்வங்கள் இருப்பதைப்போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை (நாங்கள் வணங்குவதற்கு) ஆக்கிவைப்பீராக!" என்று கூறினார்கள்; அதற்கு (மூஸாவாகிய) அவர், நிச்சயமாக நீங்கள் அறியாதவர்களான ஓர் கூட்டத்தினராவீர்கள் என்று கூறினார்.

139. "நிச்சயமாக ( விக்கிரக ஆராதனை செய்யும் ) இவர்கள் எதில் இருந்து கொண்டிருக்கிறார்களோ அது அழிந்துவிடக்கூடியதும், அவர்கள் எதை செய்து கொண்டிருக்கிறார்களோ அது முற்றிலும் வீணானதேயாகும்" என்று கூறினார்.

140. (தவிர,) " அல்லாஹ் அல்லாததையா நான் உங்களுக்கு இரட்சகனாகத் தேடுவேன்? அவனோ உங்களை அகிலத்தாரை விட மேன்மையாக்கி வைத்துள்ளான்" என்றும் அவர் கூறினார்.

141. மேலும், (இஸ்ராயீலின் மக்களே!) பிர் அவ்னுடைய கூட்டத்தாரிடமிருந்து நாம் உங்களைக் காப்பாற்றியதை (நீங்கள் நினைத்துப் பாருங்கள்.) அவர்கள் உங்களைக் கொடியவேதனையால் துன்புறுத்திக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் உங்கள் ஆண் மக்களைக் கொலை செய்துவிட்டு, உங்கள் பெண் மக்களை (மட்டும்) உயிருடன் வாழ விட்டும் வந்தார்கள்; இதில் உங்களுக்கு உங்கள் இரட்சகனால் மகத்தானதொரு சோதனையும் (ஏற்பட்டு) இருந்தது.

142. இன்னும், மூஸாவுக்கு நாம் முப்பது இரவுகளை வாக்களித்திருந்தோம்; மேலும், அதை பத்து (இரவுகளைக்) கொண்டு நாம் பூர்த்தியாக்கியும் வைத்தோம்; ஆகவே, அவருடைய இரட்சகனின் தவணை நாற்பது இரவுகளாகப் பூர்த்தியாயிற்று; அதுசமயம் மூஸா தன் சகோதரர் ஹாரூனிடம், "நீர் என்னுடைய சமூகத்தாரிடையே என் பிரதிநிதியாக இருந்து, அவர்களைச் சீர்திருத்தமும் செய்வீராக! அன்றியும் குழப்பக்காரர்களுடைய வழியை நீர் பின்பற்றாதிருப்பீராக!" என்று கூறினார்.

143. மேலும், நாம் குறிப்பிட்ட நேரத்தில் (குறிப்பிட்ட இடத்திற்கு) மூஸா வந்து, அவருடைய இரட்சகனும் அவருடன் பேசியபொழுது, " என் இரட்சகனே! நீ (உன்னை) எனக்குக் காண்பிப்பாயாக! உன்பால் நான் பார்ப்பேன்" என்று கூறினார்; (அதற்கு அல்லாஹ், , மூஸாவே!) நீர் என்னை ஒருபோதும் பார்க்க முடியாது, எனினும், இம்மலையை நீர் பார்ப்பீராக; அது தன்னுடைய இடத்தில் நிலைத்திருந்தால் அப்போது நீர் என்னைக் காண்பீர்" என்று கூறினான்; ஆகவே அவருடைய இரட்சகன் அம்மலைமீது வெளிப்பட்டபோது அ(வ்வாறு வெளிப்பட்ட நிலையான)து, அ(ம்மலையான)தை தூளாக்கிவிட்டது; இன்னும் மூஸா (திடுக்கிட்டு) மூர்ச்சையாகி விழுந்துவிட்டார்; பின்னர் அவர் தெளிவு பெற்றபோது (அல்லாஹ்விடம்) "நீ மிகப் பரிசுத்தமானவன்; நான் உன்னிடம் பாவமீட்சி கோருகின்றேன்; இன்னும், (உன்னை) விசுவாசிப்போரில் நான் முதன்மையானவன்" என்று கூறினார்.

قَالَ يٰمُوْسٰۤى اِنِّى اصْطَفَيْتُكَ عَلَى النَّاسِ بِرِسٰلٰتِىْ وَ
بِكَلَامِىْ ۖ فَخُذْ مَاۤ اٰتَيْتُكَ وَكُنْ مِّنَ الشّٰكِرِيْنَ ﴿١٤٤﴾ وَكَتَبْنَا
لَهٗ فِى الْاَلْوَاحِ مِنْ كُلِّ شَىْءٍ مَّوْعِظَةً وَّتَفْصِيْلًا لِّكُلِّ
شَىْءٍ ۚ فَخُذْهَا بِقُوَّةٍ وَّاْمُرْ قَوْمَكَ يَاْخُذُوْا بِاَحْسَنِهَا ؕ
سَاُورِيْكُمْ دَارَ الْفٰسِقِيْنَ ﴿١٤٥﴾ سَاَصْرِفُ عَنْ اٰيٰتِىَ الَّذِيْنَ
يَتَكَبَّرُوْنَ فِى الْاَرْضِ بِغَيْرِ الْحَقِّ ؕ وَاِنْ يَّرَوْا كُلَّ اٰيَةٍ
لَّا يُؤْمِنُوْا بِهَا ۚ وَاِنْ يَّرَوْا سَبِيْلَ الرُّشْدِ لَا يَتَّخِذُوْهُ سَبِيْلًا ۚ
وَاِنْ يَّرَوْا سَبِيْلَ الْغَىِّ يَتَّخِذُوْهُ سَبِيْلًا ؕ ذٰلِكَ بِاَنَّهُمْ
كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَكَانُوْا عَنْهَا غٰفِلِيْنَ ﴿١٤٦﴾ وَالَّذِيْنَ كَذَّبُوْا
بِاٰيٰتِنَا وَلِقَآءِ الْاٰخِرَةِ حَبِطَتْ اَعْمَالُهُمْ ؕ هَلْ يُجْزَوْنَ
اِلَّا مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١٤٧﴾ ع وَاتَّخَذَ قَوْمُ مُوْسٰى مِنْۢ بَعْدِهٖ مِنْ ع ١٧
حُلِيِّهِمْ عِجْلًا جَسَدًا لَّهٗ خُوَارٌ ؕ اَلَمْ يَرَوْا اَنَّهٗ لَا يُكَلِّمُهُمْ
وَلَا يَهْدِيْهِمْ سَبِيْلًا ۘ اِتَّخَذُوْهُ وَكَانُوْا ظٰلِمِيْنَ ﴿١٤٨﴾ وَلَمَّا وقف لازم
سُقِطَ فِىْۤ اَيْدِيْهِمْ وَرَاَوْا اَنَّهُمْ قَدْ ضَلُّوْا ۙ قَالُوْا لَئِنْ
لَّمْ يَرْحَمْنَا رَبُّنَا وَيَغْفِرْ لَنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ ﴿١٤٩﴾

144. (அதற்கு,) "மூஸாவே! என்னுடைய தூதுகளைக்கொண்டும், என்னுடைய பேச்சைக்கொண்டும் (எல்லா) மனிதர்களைவிட நிச்சயமாக நான் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றேன்; ஆகவே, நான் உமக்கு கொடுப்பதைப் (பலமாகப் பற்றிப்)பிடித்துக்கொள்வீராக! நன்றிசெலுத்துபவர்களிலும் நீர் ஆகிவிடுவீராக" என்று கூறினான்.

145. மேலும், (நாம் அவருக்குக் கொடுத்த) பலகைகளில் ஒவ்வொரு விஷயத்திலிருந்து நல்லுபதேசத்தையும், ஒவ்வொருவிஷயத்திற்குரிய விளக்கத்தையும் அவருக்காக நாம் எழுதி இருந்தோம், (ஆகவே), "நீர் இதனைப் பலமாகப் (பற்றிப்) பிடித்துக் கொண்டு, அதிலிருக்கும் நல்லவைகளை எடுத்து(செயல்பட்டு)க்கொள்ளுமாறுஉம்முடைய சமூகத்தாரை நீர் கட்டளையும் இடுவீராக! (உமக்கு மாறு செய்யும்) பாவிகளின் வீட்டை( தங்குமிடத்தை) நான் உங்களுக்குக் காண்பிப்பேன்" என்றும்(கூறினான்).

146. நியாயமின்றி, பூமியில் கர்வங்கொண்டிருப்போரை, என்னுடைய அத்தாட்சிகளை (விளங்கிக்கொள்வதை)விட்டும் திருப்பிவைத்துவிடுவேன்; அவர்கள் அத்தாட்சிகள் யாவையும் கண்ட போதிலும் அவைகளை நம்பிக்கை கொள்ளவுமாட்டார்கள்; (அவ்வாறே) நேர் வழியை அவர்கள் கண்டாலும் அதனை அவர்கள் (நேரான) வழியாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள்;(ஆனால்) தவறான வழியை அவர்கள் கண்டாலோ, அதனையே (தங்களுக்குரிய) வழியாக எடுத்துக்கொள்வார்கள்; அது(ஏனெனில்) நிச்சயமாக அவர்கள், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினர் என்பதாலும், அவைகளை விட்டும் அவர்கள் மறந்தவர்களாகவும் இருந்தார்கள் என்ற காரணத்தினாலுமாகும்.

147. நம்முடைய வசனங்களையும், மறுமையின் சந்திப்பையும் பொய்யாக்கு கின்றார்களே அத்தகையோர்_ அவர்களுடைய (நற்) காரியங்கள் யாவும் அழிந்து விட்டன; அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கே தவிர (வேறெதற்கும்) கூலி கொடுக்கப்படுவார்களா?

148. மூஸாவுடைய சமூகத்தார் அவருக்குப்பின்னர், தங்கள் ஆபரணங் களிலிருந்து ஒருகாளைக்கன்றை (அதன்)_உடலை(த்தெய்வமாக) எடுத்துக் கொண்டார்கள்; அதற்கு, (மாட்டின் சப்தத்தைப் போன்ற) சப்தமிருந்தது. நிச்சயமாக அது, அவர்களுடன் பேசவுமாட்டாது; அவர்களுக்கு யாதொரு வழியைக் காட்டவுமாட்டாது என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (எனினும்,) அவர்கள் அதனையே (தெய்வமாக) எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் (தமக்குத் தாமே) அநியாயக்காரர்களாகவும் ஆகிவிட்டனர்.

149. மேலும், அவர்கள்(செய்து விட்டது பற்றி) மிகவும் கைசேதப்பட்டு, திட்டமாகத் தாங்களே வழிதவறி விட்டார்கள் என்பதையும் அவர்கள் கண்டபொழுது, "எங்கள் இரட்சகன் எங்களுக்கு அருள் புரிந்து எங்களை மன்னிக்காவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

وَلَمَّا رَجَعَ مُوْسٰٓى اِلٰى قَوْمِهٖ غَضْبَانَ اَسِفًا ۙ قَالَ بِئْسَمَا
خَلَفْتُمُوْنِىْ مِنْۢ بَعْدِىْ ۚ اَعَجِلْتُمْ اَمْرَ رَبِّكُمْ ۚ وَاَلْقَى الْاَلْوَاحَ
وَاَخَذَ بِرَاْسِ اَخِيْهِ يَجُرُّهٗٓ اِلَيْهِ ۭ قَالَ ابْنَ اُمَّ اِنَّ الْقَوْمَ
اسْتَضْعَفُوْنِىْ وَكَادُوْا يَقْتُلُوْنَنِىْ ښ فَلَا تُشْمِتْ بِىَ الْاَعْدَآءَ وَ
لَا تَجْعَلْنِىْ مَعَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ﴿١٥٠﴾ قَالَ رَبِّ اغْفِرْ لِىْ وَلِاَخِىْ وَ
اَدْخِلْنَا فِىْ رَحْمَتِكَ ښ وَاَنْتَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿١٥١﴾ اِنَّ الَّذِيْنَ اتَّخَذُوا ع ١٨/٨
الْعِجْلَ سَيَنَالُهُمْ غَضَبٌ مِّنْ رَّبِّهِمْ وَذِلَّةٌ فِى الْحَيٰوةِ الدُّنْيَا ۭ
وَكَذٰلِكَ نَجْزِى الْمُفْتَرِيْنَ ﴿١٥٢﴾ وَالَّذِيْنَ عَمِلُوا السَّيِّاٰتِ ثُمَّ تَابُوْا
مِنْۢ بَعْدِهَا وَاٰمَنُوْٓا ۡ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿١٥٣﴾
وَلَمَّا سَكَتَ عَنْ مُّوْسَى الْغَضَبُ اَخَذَ الْاَلْوَاحَ ښ وَفِىْ نُسْخَتِهَا
هُدًى وَّرَحْمَةٌ لِّلَّذِيْنَ هُمْ لِرَبِّهِمْ يَرْهَبُوْنَ ﴿١٥٤﴾ وَاخْتَارَ مُوْسٰى
قَوْمَهٗ سَبْعِيْنَ رَجُلًا لِّمِيْقَاتِنَا ۚ فَلَمَّآ اَخَذَتْهُمُ الرَّجْفَةُ قَالَ رَبِّ
لَوْ شِئْتَ اَهْلَكْتَهُمْ مِّنْ قَبْلُ وَاِيَّاىَ ۭ اَتُهْلِكُنَا بِمَا فَعَلَ السُّفَهَآءُ
مِنَّا ۚ اِنْ هِىَ اِلَّا فِتْنَتُكَ ۭ تُضِلُّ بِهَا مَنْ تَشَآءُ وَتَهْدِىْ مَنْ
تَشَآءُ ۭ اَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الْغٰفِرِيْنَ ﴿١٥٥﴾

150. மேலும், (இதனை அறிந்த மூஸா) கோபங்கொண்டவராக_ பெரும் வருத்தம்நிறைந்தவராக தன் சமூகத்தாரிடம் திரும்பி வந்தபொழுது, (அவர்களிடம்,) "நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த (இச்செயலான)து மிகக் கெட்டது; உங்கள் இரட்சகனின் கட்டளை (வேதனை) வருவதை நீங்கள் அவசரப் படுகின்றீர்களா?" என்று கூறி (அல்லாஹ்வின் கட்டளைகள் எழுதப்பட்ட) பலகைகளைப்போட்டுவிட்டு, தன் சகோதரரின் தலை (முடி)யைப் பிடித்துத் தன் பக்கம் இழுத்தார்; அ(தற்க)வர், "என் தாயின் மகனே! இந்த மக்கள் நிச்சயமாக என்னை பலவீனப்படுத்திவிட்டனர்; என்னைக் கொலை செய்துவிடவும் முற்பட்டனர். என்னுடைய விரோதிகள் என்னைப் பார்த்து சிரிக்குமாறு நீர் செய்துவிடாதீர்; இந்த அக்கிரமக்கார சமூகத்தாருடன் என்னை ஆக்கியும் விடாதீர்" என்று கூறினார்.

151. "என் இரட்சகனே ! என்னையும், என் சகோதரரையும் நீ மன்னித்தருள்வாயாக! உன்னுடைய கிருபையில் எங்களையும் பிரவேசிக்கச்செய்வாயாக ! நீ கிருபை செய்வோரிலெல்லாம், மிக்க கிருபையாளன்" என்று (பிரார்த்தனை செய்து) கூறினார்.

152. " நிச்சயமாக காளைக் கன்றை (த் தெய்வமாக) எடுத்துக்கொண்டார்களே அத்தகையோர்_ அவர்களுடைய இரட்சகனிடமிருந்து கோபமும், இவ்வுலக வாழ்க்கையில் இழிவும் அவர்களை வந்தடையும்; பொய்க் கற்பனை செய்வோருக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்" (என்று அல்லாஹ் கூறினான்).

153. மேலும், தீயசெயல்கள் செய்துவிட்டு, (மனம் வருந்தி) அதன் பின் பச்சாதாபப்பட்டு, (அதிலிருந்து விலகி, உண்மையாகவே) விசுவாசமும் கொண்டு விட்டார்களே அத்தகையோர்_(அவர்களுடைய பாவத்தை) நிச்சயமாக உமதிரட்சகன் அதற்குப்பின் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபை செய்பவன்.

154. மேலும் மூஸாவுடைய கோபம் தணிந்தபோது, அவர் (அந்தப்) பலகை களை எடுத்துக்கொண்டார்; அவற்றில் வரையப்பட்டிருந்ததில் தங்களுடைய இரட்சகனை பயப்படுகின்றார்களே அத்தகையோருக்கு நேர் வழியும், (அவனின்) பேரருளும் இருந்தன.

155. மேலும், மூஸா நாம் குறித்த நேரத்திற்காக தம் சமூகத்தாரில் எழுபது ஆண் களைத் தேர்ந்தெடுத்தார்; அவர்களைப் பூகம்பம் பிடித்தபொழுது, "என் இரட்ச கனே! நீ நாடியிருந்தால், இதற்கு முன்னதாகவே இவர்களையும், என்னையும் நீ அழித்திருக்கலாமே! எங்களிலுள்ள அறிவீனர்கள் சிலர் செய்ததற்காக, எங்களை நீ அழித்துவிடுகிறாயா? இது உன்னுடைய சோதனையேயன்றி வேறில்லை; இதனைக் கொண்டு நீ நாடியவர்களை வழி தவறச்செய்கிறாய்; நீ நாடியவர்களை நேர் வழியிலும் செலுத்துகிறாய்; நீயே எங்களுடைய பாதுகாவலன்; ஆகவே நீ எங்களை மன்னித்தருள்வாயாக! மேலும், எங்களுக்கு நீ அருள் புரிவாயாக! நீயே மன்னிப்பவர்களில் மிக்கமேலானவன்" என்று அவர் (பிரார்த்தித்துக்) கூறினார்.

وَاكْتُبْ لَنَا فِيْ هٰذِهِ الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ اِنَّا
هُدْنَآ اِلَيْكَ ؕ قَالَ عَذَابِيْٓ اُصِيْبُ بِهٖ مَنْ اَشَآءُ ۚ وَرَحْمَتِيْ
وَسِعَتْ كُلَّ شَيْءٍ ؕ فَسَاَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ وَيُؤْتُوْنَ
الزَّكٰوةَ وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِنَا يُؤْمِنُوْنَ ﴿١٥٦﴾ۚ اَلَّذِيْنَ
يَتَّبِعُوْنَ الرَّسُوْلَ النَّبِيَّ الْاُمِّيَّ الَّذِيْ يَجِدُوْنَهٗ مَكْتُوْبًا
عِنْدَهُمْ فِي التَّوْرٰىةِ وَالْاِنْجِيْلِ ۫ يَاْمُرُهُمْ بِالْمَعْرُوْفِ
وَيَنْهٰىهُمْ عَنِ الْمُنْكَرِ وَيُحِلُّ لَهُمُ الطَّيِّبٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ
الْخَبٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ اِصْرَهُمْ وَالْاَغْلٰلَ الَّتِيْ كَانَتْ
عَلَيْهِمْ ؕ فَالَّذِيْنَ اٰمَنُوْا بِهٖ وَعَزَّرُوْهُ وَنَصَرُوْهُ وَ
اتَّبَعُوا النُّوْرَ الَّذِيْٓ اُنْزِلَ مَعَهٗٓ ۙ اُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿١٥٧﴾ۧ ع ١٩ ٢ ٩
قُلْ يٰٓاَيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعَا
الَّذِيْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ۚ لَآ اِلٰهَ اِلَّا هُوَ يُحْيٖ
وَيُمِيْتُ ۠ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهِ النَّبِيِّ الْاُمِّيِّ الَّذِيْ
يُؤْمِنُ بِاللّٰهِ وَكَلِمٰتِهٖ وَاتَّبِعُوْهُ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿١٥٨﴾ وَ
مِنْ قَوْمِ مُوْسٰٓى اُمَّةٌ يَّهْدُوْنَ بِالْحَقِّ وَبِهٖ يَعْدِلُوْنَ ﴿١٥٩﴾

156. இன்னும், "இவ்வுலகத்தில் எங்களுக்கு நன்மையை எழுதிவிடுவாயாக! மறுமையிலும் (நன்மையை எழுதுவாயாக!) நிச்சயமாக நாங்கள் உன்பக்கமே திரும்பிவிட்டோம்" (என்றும் பிரார்த்தித்தார்). அ(தற்கு அல்லாஹ்வாகிய அ)வன், "என்னுடைய வேதனையாகிறது_ அதனைக்கொண்டு நான் நாடியவர்களை பிடிப்பேன்; என்னுடைய அருளோ எல்லா வஸ்துக்களிலும் சூழ்ந்து விசாலமாகியுள்ளது; ஆகவே, "(என்னுடைய அருளாகிய) அதனை, (எனக்குப்) பயந்து, ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களே அத்தகையோருக்கும், நம்முடைய வசனங்களை விசுவாசிக்கிறார்களே அத்தகையோருக்கும் நான் (விதித்து) எழுதிவிடுவேன்" என்று கூறினான்.

157. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களிடமுள்ள தவ்றாத்திலும், இன்ஜீலிலும், அவரைப் பற்றி எழுதப்பட்டவராகக் காண்கிறார்களே அத்தகைய (எழுத்தாற்றல் அற்ற) உம்மிநபியான இத்தூதரை பின்பற்றுகிறார்கள்; (இத்தூதரோ) அவர்களை நன்மையான காரியங்களை(ச் செய்யுமாறு) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்குவார்; நல்லவைகளையே அவர்களுக்கு (உண்ண) அவர் ஆகுமாக்கியும் வைப்பார்; கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்தும்விடுவார்; அவர்களுடைய பளுவையும், அவர்கள் மீதிருந்ததே அத்தகைய கடினமானவைகளையும் (இரட்சகனின் அனுமதி கொண்டு) அவர்களை விட்டும் நீக்கிவிடுவார்; ஆகவே, அவரை (உண்மையாகவே) விசுவாசித்து, இன்னும் அவரை கண்ணியம் செய்து, அவருக்கு உதவியும் புரிந்து, அவருடன் இறக்கி வைக்கப்பட்ட ஒளி மிக்க (இவ்வேதத்)தையும் பின்பற்றுகிறார்களே அத்தகையோர்_அவர்கள்தாம் வெற்றியாளர்களாவர்.

158. (நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாகவே நான் உங்கள் யாவருக்கும், அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்; அவன் எத்தகையோனென்றால், வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்கே உரியது; வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர (வேறு எவரும்) இல்லை; அவனே உயிர்ப்பிக்கிறான்; அவனே மரணிக்கச் செய்கிறான். ஆகவே, அந்த அல்லாஹ்வையும், (எழுத்தாற்றல் அற்ற) உம்மி நபியாகிய அவனுடைய (இத்)தூதரையும் நீங்கள் விசுவாசிப்பீர்களாக! அவர் எத்தகையவரென்றால்_அல்லாஹ்வையும், அவனுடைய வசனங்களையும் விசுவாசிக்கின்றார்; (ஆகவே) நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அவரையே நீங்கள் பின்பற்றுங்கள்.

159. இன்னும், மூஸாவுடைய சமூகத்தாரில் ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர்; அவர்கள் சத்தியத்தைக்கொண்டு (மற்ற மனிதர்களுக்கு) வழி காண்பிக்கின்றனர்; அதன்படி நீதியும் செய்கின்றனர்.

وَقَطَّعْنٰهُمُ اثْنَتَیْ عَشْرَةَ اَسْبَاطًا اُمَمًا ؕ وَ اَوْحَیْنَاۤ اِلٰی
مُوْسٰۤی اِذِ اسْتَسْقٰىهُ قَوْمُهٗۤ اَنِ اضْرِبْ بِّعَصَاكَ الْحَجَرَ ۚ
فَانْۢبَجَسَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَیْنًا ؕ قَدْ عَلِمَ كُلُّ اُنَاسٍ
مَّشْرَبَهُمْ ؕ وَ ظَلَّلْنَا عَلَیْهِمُ الْغَمَامَ وَ اَنْزَلْنَا عَلَیْهِمُ
الْمَنَّ وَ السَّلْوٰی ؕ كُلُوْا مِنْ طَیِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ ؕ وَ
مَا ظَلَمُوْنَا وَ لٰكِنْ كَانُوْۤا اَنْفُسَهُمْ یَظْلِمُوْنَ ﴿١٦٠﴾ وَ اِذْ قِیْلَ
لَهُمُ اسْكُنُوْا هٰذِهِ الْقَرْیَةَ وَ كُلُوْا مِنْهَا حَیْثُ
شِئْتُمْ وَ قُوْلُوْا حِطَّةٌ وَّ ادْخُلُوا الْبَابَ سُجَّدًا نَّغْفِرْ
لَكُمْ خَطِیْٓـٰٔتِكُمْ ؕ سَنَزِیْدُ الْمُحْسِنِیْنَ ﴿١٦١﴾ فَبَدَّلَ
الَّذِیْنَ ظَلَمُوْا مِنْهُمْ قَوْلًا غَیْرَ الَّذِیْ قِیْلَ لَهُمْ
فَاَرْسَلْنَا عَلَیْهِمْ رِجْزًا مِّنَ السَّمَآءِ بِمَا كَانُوْا
یَظْلِمُوْنَ ﴿١٦٢﴾ ع وَ سْـَٔلْهُمْ عَنِ الْقَرْیَةِ الَّتِیْ كَانَتْ ع ٢٠
حَاضِرَةَ الْبَحْرِ ۘ اِذْ یَعْدُوْنَ فِی السَّبْتِ اِذْ تَاْتِیْهِمْ وقف لازم
حِیْتَانُهُمْ یَوْمَ سَبْتِهِمْ شُرَّعًا وَّ یَوْمَ لَا یَسْبِتُوْنَ ۙ لَا
تَاْتِیْهِمْ ۛۚ كَذٰلِكَ ۛۚ نَبْلُوْهُمْ بِمَا كَانُوْا یَفْسُقُوْنَ ﴿١٦٣﴾ معانقة ٢ عند المتاخرين النصف

160. மேலும், (மூஸாவுடைய கூட்டத்தாராகிய) அவர்களை பன்னிரண்டு பிரிவினர்களாக_ கூட்டத்தினர்களாக_ நாம் பிரித்தோம்; மூஸாவிடம் அவருடைய கூட்டத்தார் தண்ணீர் கேட்டபோது, நாம் (அவரிடம்,) "உம்முடைய கைத்தடியைக்கொண்டு இக்கல்லை அடிப்பீராக!" என்று அவருக்கு வஹீ அறிவித்தோம்; அப்போது (அவர் அவ்வாறு அடிக்கவே,) அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுக்கள் பொங்கிவந்தன ; ஒவ்வொரு பிரிவினரும் (அவற்றில்) தங்கள் நீரருந்துமிடத்தைத் திட்டமாக அறிந்து கொண்டனர்; மேலும், அவர்கள் மீது மேகங்களை நிழலிடும்படிச் செய்தோம்; அவர்களுக்காக 'மன்னு,' 'ஸல்வா' (எனும் மேலான உண)வையும் இறக்கிவைத்து, நாம் உங்களுக்கு அளித்துள்ள நல்லவற்றிலிருந்து புசியுங்கள்; (என்னும் நம் கட்டளைக்கு மாறுசெய்தனர். அதனால்) அவர்கள் நமக்கு அநியாயம் செய்துவிடவில்லை; எனினும், அவர்கள் தமக்குத்தாமே அநியாயம் செய்கிறவர்களாக இருந்தனர்.

161. இன்னும், (அவர்களிடம்,) "நீங்கள் இவ்வூரில் குடியிருங்கள்; இதில் நீங்கள் நாடிய இடத்திலெல்லாம் உண்ணுங்கள்; ஹித்ததுன் (எங்கள் பாவச் சுமை நீங்குக!) என்று கூறுங்கள்; (அதன்) வாயிலில் தலை தாழ்த்தியவர்களாகவும் நுழையுங்கள்; நாம் உங்களுடைய குற்றங்களை உங்களுக்கு மன்னித்துவிடுவோம்; நன்மை செய்வோருக்கு (அதன் கூலியை) நாம் அதிகப்படுத்துவோம்," என்று அவர்களுக்குக் கூறப்பட்டபோது;

162. அவர்களில் அநியாயம் செய்தோர் அவர்களுக்குக் கூறப்பட்டதல்லாத (வேறு) வார்த்தையாக (அதை) மாற்றி விட்டார்கள்; ஆகவே, (இவ்வாறு) அவர்கள் அநியாயம் செய்ததன் காரணமாக நாம் அவர்கள் மீது வானத்திலிருந்து வேதனையை இறக்கிவைத்தோம்.

163. மேலும், (நபியே!) கடலோரத்திலிருந்த ஓர் ஊர் (மக்களைப்) பற்றி நீர் அவர்களைக் கேட்பீராக! (தடுக்கப்பட்ட நாளாகிய) சனிக்கிழமையன்று (மீன் பிடிப்பது தடுக்கப்பட்டிருந்தும்) அவர்கள் வரம்புமீறி (மீன் பிடித்து)க் கொண்டிருந்தார்கள் . ஏனென்றால், சனிக்கிழமையன்று (அக்கடலிலிருந்து) மீன்கள் 'நீர்மட்டத்திற்கு மேலாக தங்கள் தலைகளை நீட்டிக்கொண்டு அவர்கள் முன் வந்தன. சனிக்கிழமையல்லாத நாட்களில் அவர்களிடம் அவை வருவதில்லை; இவ்வாறு அவர்கள் பாவங்கள் செய்து கொண்டிருந்ததன் காரணத்தால் அவர்களை நாம் சோதனைக்குள்ளாக்கினோம்.

وَاِذْ قَالَتْ اُمَّةٌ مِّنْهُمْ لِمَ تَعِظُوْنَ قَوْمًا ۙ اللّٰهُ مُهْلِكُهُمْ اَوْ
مُعَذِّبُهُمْ عَذَابًا شَدِيْدًا ؕ قَالُوْا مَعْذِرَةً اِلٰى رَبِّكُمْ وَلَعَلَّهُمْ
يَتَّقُوْنَ ﴿۱۶۴﴾ فَلَمَّا نَسُوْا مَا ذُكِّرُوْا بِهٖۤ اَنْجَيْنَا الَّذِيْنَ يَنْهَوْنَ عَنِ
السُّوْٓءِ وَاَخَذْنَا الَّذِيْنَ ظَلَمُوْا بِعَذَابٍۭ بَـِٔيْسٍۭ بِمَا كَانُوْا
يَفْسُقُوْنَ ﴿۱۶۵﴾ فَلَمَّا عَتَوْا عَنْ مَّا نُهُوْا عَنْهُ قُلْنَا لَهُمْ كُوْنُوْا
قِرَدَةً خٰسِـِٕيْنَ ﴿۱۶۶﴾ وَاِذْ تَاَذَّنَ رَبُّكَ لَيَبْعَثَنَّ عَلَيْهِمْ اِلٰى
يَوْمِ الْقِيٰمَةِ مَنْ يَّسُوْمُهُمْ سُوْٓءَ الْعَذَابِ ؕ اِنَّ رَبَّكَ لَسَرِيْعُ
الْعِقَابِ ۖۚ وَاِنَّهٗ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ﴿۱۶۷﴾ وَقَطَّعْنٰهُمْ فِى الْاَرْضِ اُمَمًا ۚ
مِنْهُمُ الصّٰلِحُوْنَ وَمِنْهُمْ دُوْنَ ذٰلِكَ ؗ وَبَلَوْنٰهُمْ بِالْحَسَنٰتِ
وَالسَّيِّاٰتِ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ ﴿۱۶۸﴾ فَخَلَفَ مِنْۢ بَعْدِهِمْ خَلْفٌ وَّرِثُوا
الْكِتٰبَ يَاْخُذُوْنَ عَرَضَ هٰذَا الْاَدْنٰى وَيَقُوْلُوْنَ سَيُغْفَرُ لَنَا ۚ
وَاِنْ يَّاْتِهِمْ عَرَضٌ مِّثْلُهٗ يَاْخُذُوْهُ ؕ اَلَمْ يُؤْخَذْ عَلَيْهِمْ مِّيْثَاقُ
الْكِتٰبِ اَنْ لَّا يَقُوْلُوْا عَلَى اللّٰهِ اِلَّا الْحَقَّ وَدَرَسُوْا مَا فِيْهِ ؕ وَالدَّارُ
الْاٰخِرَةُ خَيْرٌ لِّلَّذِيْنَ يَتَّقُوْنَ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ﴿۱۶۹﴾ وَالَّذِيْنَ يُمَسِّكُوْنَ
بِالْكِتٰبِ وَاَقَامُوا الصَّلٰوةَ ؕ اِنَّا لَا نُضِيْعُ اَجْرَ الْمُصْلِحِيْنَ ﴿۱۷۰﴾

164. இன்னும், அவர்களில் ஒரு சாரார், (நல்லுபதேசம் செய்தவர்களிடம்) "அல்லாஹ் எவர்களை அழித்துவிடுகிறவனாக அல்லது அவர்களை கடினமான வேதனையாக வேதனை செய்கிறவனாக இருக்கின்றானோ அந்த மக்களுக்கு நீங்கள் ஏன் நல்லுபதேசம் செய்கிறீர்கள்" என்று கூறியபொழுது அவர்கள், இதனால் நாம் உங்கள் இரட்சகனிடம் (நம்) பொறுப்பிலிருந்து நீங்கிவிடுவதற்காகவும் (அதனால் மீன் பிடிக்கும்) அவர்கள் (ஒருக்கால் தவறிலிருந்து விலகி அல்லாஹ்வை) அஞ்சி விடலாம்" என்பதற்காகவும் (நாங்கள் உபதேசம் செய்கிறோம்) எனக் கூறினார்கள்.

165. பின்னர் அவர்களுக்கு எதுபற்றி நினைவுபடுத்தப்பட்டதோ அதை அவர்கள் மறந்து (மீன்பிடிக்க முற்பட்டு) விட்டபோது தீமை செய்வதிலிருந்து தடுத்துக் கொண்டிருந்தோரை நாம் காப்பாற்றினோம்; அநியாயம் செய்தவர்களை அவர்கள் செய்துகொண்டிருந்த பாவத்தின் காரணமாக கொடிய வேதனையைக் கொண்டும் நாம் பிடித்துக் கொண்டோம்.

166. ஆகவே, எதனைவிட்டும் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தனரோ அதனைவிட்டும் அவர்கள் வரம்புமீறியபோது, "நீங்கள் இகழப்பட்டவர்களாக, குரங்குகளாகி விடுங்கள்" என்று அவர்களுக்கு நாம் (சபித்துக்) கூறினோம்.

167. மேலும், (நபியே!) உமதிரட்சகன்_அவர்களுக்குக் கொடிய வேதனை கொடுக்கக் கூடியவர்களையே அவர்கள் மீது (ஆதிக்கம் வகிக்கும்படி) இறுதிநாள் வரையில் அவன் நிச்சயமாக அனுப்பி வருவான் என்று (அவர்களுக்கு) அறிவித்ததை (நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக!) நிச்சயமாக உமதிரட்சகன் (அவனுக்கு மாறு செய்து வந்தோரை) தண்டிப்பதில் மிக்க தீவிரமானவன்; மேலும் நிச்சயமாக (அவன்பால் மீளுகிறவர்களுக்கு) அவன் மிக்க மன்னிக்கிறவன்; நிகரற்ற அன்புடையவன்.

168. மேலும், அவர்களை இப்புவியில் பல கூட்டத்தினர்களாக நாம் பிரித்து விட்டோம்; அவர்களிலிருந்து நல்லோர்களும் இருக்கின்றனர்; இதுவல்லாத (பொல்லாத) வர்களும் அவர்களில் இருக்கின்றனர்; அவர்கள் (பாவங்களிலிருந்து) மீளுவதற்காக நல்லவைகளைக் கொண்டும், தீயவைகளைக் கொண்டும் நாம் அவர்களைச் சோதித்தோம்.

169. அவர்களுக்குப் பின்னர், அவர்களுடைய இடத்தை தீய ஒரு சாரார் அடைந்தனர்; அவர்கள், (தவ்றாத்) வேதத்திற்கு அனந்தரக்காரர்களாக ஆனார்கள்; இவ்வற்ப (உலகின்) பொருளைப் பெற்றுக்கொண்(டு வேதத்தை மாற்றி விட்)டனர். (இதைப்பற்றி) "எங்களுக்கு மன்னிப்பளிக்கப்படும்" என்றும் கூறுகிறார்கள்; (பின்னும் முன்போல் புரட்டுவதற்காக) இதேபோன்ற அற்பப் பொருள் அவர்களிடம் வருமானால், அதனை எடுத்துக்கொள்வார்கள்; அவர்கள், அல்லாஹ்வின் மீது உண்மையைத் தவிர வேறு எதையும் கூறக்கூடாதென்று (அவர்களுடைய) வேதத்தின் மூலம் அவர்களிடம் உறுதிமொழி வாங்கப் படவில்லையா? அதில் உள்ளதை அவர்கள் ஓதியும் வருகின்றனர்; (எனினும், அவற்றை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.) மேலும் பயபக்தியுடையவர்களுக்கு, மறுமையின் வீடே மிக்க மேலானதாகும். நீங்கள் விளங்கிக்கொள்ளமாட்டீர்களா?

170. இன்னும், (இவ்)வேதத்தைப் பலமாக(ப் பற்றி)ப் பிடித்துக் கொண்டு, தொழுகையையும் நிறைவேற்றி வருகின்றார்களே அத்தகையோர்_(அதுபோன்ற) நல்லோர்களின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்கமாட்டோம்.

وَاِذْ نَتَقْنَا الْجَبَلَ فَوْقَهُمْ كَاَنَّهٗ ظُلَّةٌ وَّظَنُّوْٓا اَنَّهٗ وَاقِعٌۢ بِهِمْ ۚ
خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّاذْكُرُوْا مَا فِيْهِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۷۱﴾ وَ ع ۲۱ ۹
اِذْ اَخَذَ رَبُّكَ مِنْۢ بَنِيْٓ اٰدَمَ مِنْ ظُهُوْرِهِمْ ذُرِّيَّتَهُمْ وَ
اَشْهَدَهُمْ عَلٰٓى اَنْفُسِهِمْ ۚ اَلَسْتُ بِرَبِّكُمْ ؕ قَالُوْا بَلٰى ۛۚ شَهِدْنَا ۛۚ اَنْ
تَقُوْلُوْا يَوْمَ الْقِيٰمَةِ اِنَّا كُنَّا عَنْ هٰذَا غٰفِلِيْنَ ﴿۱۷۲﴾ لا اَوْ تَقُوْلُوْٓا اِنَّمَآ
اَشْرَكَ اٰبَآؤُنَا مِنْ قَبْلُ وَكُنَّا ذُرِّيَّةً مِّنْۢ بَعْدِهِمْ ۚ اَفَتُهْلِكُنَا
بِمَا فَعَلَ الْمُبْطِلُوْنَ ﴿۱۷۳﴾ وَكَذٰلِكَ نُفَصِّلُ الْاٰيٰتِ وَلَعَلَّهُمْ
يَرْجِعُوْنَ ﴿۱۷۴﴾ وَاتْلُ عَلَيْهِمْ نَبَاَ الَّذِيْٓ اٰتَيْنٰهُ اٰيٰتِنَا فَانْسَلَخَ
مِنْهَا فَاَتْبَعَهُ الشَّيْطٰنُ فَكَانَ مِنَ الْغٰوِيْنَ ﴿۱۷۵﴾ وَلَوْ شِئْنَا
لَرَفَعْنٰهُ بِهَا وَلٰكِنَّهٗٓ اَخْلَدَ اِلَى الْاَرْضِ وَاتَّبَعَ هَوٰىهُ ۚ فَمَثَلُهٗ
كَمَثَلِ الْكَلْبِ ۚ اِنْ تَحْمِلْ عَلَيْهِ يَلْهَثْ اَوْ تَتْرُكْهُ يَلْهَثْ ؕ
ذٰلِكَ مَثَلُ الْقَوْمِ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ۚ فَاقْصُصِ
الْقَصَصَ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ ﴿۱۷۶﴾ سَآءَ مَثَلَا ۨالْقَوْمُ الَّذِيْنَ
كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَاَنْفُسَهُمْ كَانُوْا يَظْلِمُوْنَ ﴿۱۷۷﴾ مَنْ يَّهْدِ اللّٰهُ
فَهُوَ الْمُهْتَدِيْ ۚ وَمَنْ يُّضْلِلْ فَاُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ ﴿۱۷۸﴾

معانقة ۷ عند المتاخرين ۱۲

171. மேலும், ('ஸினாய்') மலையை அவர்களுக்கு மேல் அது நிழலைப் போன்று (இருக்க) நாம் உயர்த்தியசமயத்தில் நிச்சயமாக அ(ம்மலையான)து அவர்கள்மீது விழுந்து விடுமென்று அவர்கள் எண்ணி (பயந்த)னர்; (அப்போது,) "நாம் உங்களுக்குக் கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; இன்னும், அதிலுள்ளவற்றை (எப்பொழுதும் கவனத்தில் வைத்து) நினைவு கூருங்கள்; (இன்னும் அதிலுள்ளவாறு நீங்கள் செயல்பட்டால்) நீங்கள் பயபக்தியுடையோர்களாகி விடலாம்" (என்று நாம் அவர்களுக்குக் கூறியதை, நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூர்வீராக!)

172. (நபியே!) உமதிரட்சகன் ஆதமுடைய மக்களில் அவர்களுடைய முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை (வெளியாக்கி), அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக்கி, (அவர்களிடம்) "நான் உங்கள் இரட்சகனல்லவா?" என்று (கேட்டு உடன் படிக்கையை) எடுத்த சமயத்தில் "ஆம்! (நீதான் இரட்சகன், அதன்மீது) நாங்கள் சாட்சியம் கூறுகிறோம்" என்று அவர்கள் கூறியதை, (நீர் அவர்களுக்கு நினைவூட்டுவீராக! இது ஏனென்றால், "இதனை ஒருவரும் எங்களுக்கு நினைவூட்டாததனால்) நிச்சயமாக நாங்கள் இதனை மறந்தவர்களாக இருந்துவிட்டோம்" என்று மறுமை நாளில் நீங்கள் சொல்லாதிருப்பதற்காக_

173. அல்லது, "இணையாக்கியதெல்லாம் (எங்களுக்கு) முன்னிருந்த எங்கள் மூதாதையர்கள்தாம், நாங்களோ அவர்களுக்குப் பின்னுள்ள (அவர்களுடைய) சந்ததியினராக இருக்கிறோம்_ ஆகவே அந்த வழி கெட்டோர்கள் செய்தவற்றுக்காக நீ எங்களை அழித்துவிடலாமா?" என்று நீங்கள் சொல்லாமலிருப்பதற்காக (இதனை உங்களுக்கு நாம் நினைவூட்டுகிறோம் என்று நபியே! நீர் கூறுவீராக!).

174. மேலும், இவ்வாறே (நம்) வசனங்களை நாம் விவரிக்கிறோம்; (இதன் மூலம்) அவர்கள் (பாவங்களிலிருந்து விடுபட்டு நம்மிடம்) திரும்புவதற்காகவும் (நாம்விவரித்துக் கூறுகிறோம்.)

175. நாம் எவனுக்கு நம் அத்தாட்சிகளைக் கொடுத்திருந்தோமோ, அத்தகையவனின் செய்தியை (யூதர்களாகிய)அவர்களுக்கு (நபியே! நீர்) ஓதிக் காண்பிப்பீராக! பின்னர், அவன் அதிலிருந்து கழன்று கொண்டான்; ஆகவே, ஷைத்தான் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்; எனவே, (அவனது சூழ்ச்சிக்குள் சிக்கி) அவன் வழி தவறியவர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டான்.

176. மேலும், நாம் நாடியிருந்தால், (நம் அத்தாட்சிகளான)அவற்றைக் கொண்டு அவனை நாம் உயர்த்தியிருப்போம்; எனினும் அவன் பூமியின் (ஆடம்பர வாழ்க்கையின்) பால் சாய்ந்துவிட்டான்; தன் (மன) இச்சையையும் பின்பற்றி விட்டான்; ஆகவே அவனுடைய உதாரணம்: (ஒரு) நாயின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது; நீர் அதனைத் துரத்தினாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது; அதனை(த் துரத்தாது) விட்டுவிட்டாலும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொள்கிறது; இதுவே, நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கினார்களே அந்தக் கூட்டத்தினர்க்கு உதாரணமாகும். ஆகவே, அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறுவதற்காக (இத்தகைய) வரலாற்றைக் கூறுவீராக!

177. நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கிய கூட்டத்தாரின் உதாரணம் மிகக் கெட்டதாகும்; அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்கிறவர்களாகவும் இருந்தனர்.

178. அல்லாஹ், யாரை நேர்வழி செலுத்துகின்றானோ அவரே நேர்வழி அடைந்தவர்; மேலும், எவரை அவன் வழிதவறச்செய்கிறானோ அத்தகையோர் தாம் நஷ்டவாளிகள்.

وَلَقَدْ ذَرَاْنَا لِجَهَنَّمَ كَثِيْرًا مِّنَ الْجِنِّ وَالْاِنْسِ ۖ لَهُمْ قُلُوْبٌ لَّا
يَفْقَهُوْنَ بِهَا ۫ وَلَهُمْ اَعْيُنٌ لَّا يُبْصِرُوْنَ بِهَا ۫ وَلَهُمْ اٰذَانٌ لَّا
يَسْمَعُوْنَ بِهَا ؕ اُولٰٓئِكَ كَالْاَنْعَامِ بَلْ هُمْ اَضَلُّ ؕ اُولٰٓئِكَ هُمُ الْغٰفِلُوْنَ ﴿١٧٩﴾
وَلِلّٰهِ الْاَسْمَآءُ الْحُسْنٰى فَادْعُوْهُ بِهَا ۪ وَذَرُوا الَّذِيْنَ يُلْحِدُوْنَ
فِيْٓ اَسْمَآئِهٖ ؕ سَيُجْزَوْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١٨٠﴾ وَمِمَّنْ خَلَقْنَآ اُمَّةٌ
يَّهْدُوْنَ بِالْحَقِّ وَبِهٖ يَعْدِلُوْنَ ﴿١٨١﴾ ۧ وَالَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا ع ٢٢ ١٢
سَنَسْتَدْرِجُهُمْ مِّنْ حَيْثُ لَا يَعْلَمُوْنَ ﴿١٨٢﴾ ۚ وَاُمْلِيْ لَهُمْ ؕ اِنَّ كَيْدِيْ
مَتِيْنٌ ﴿١٨٣﴾ اَوَلَمْ يَتَفَكَّرُوْا ٚ مَا بِصَاحِبِهِمْ مِّنْ جِنَّةٍ ؕ اِنْ هُوَ اِلَّا نَذِيْرٌ
مُّبِيْنٌ ﴿١٨٤﴾ اَوَلَمْ يَنْظُرُوْا فِيْ مَلَكُوْتِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا خَلَقَ
اللّٰهُ مِنْ شَيْءٍ ۙ وَّاَنْ عَسٰٓى اَنْ يَّكُوْنَ قَدِ اقْتَرَبَ اَجَلُهُمْ ۚ فَبِاَيِّ
حَدِيْثٍۭ بَعْدَهٗ يُؤْمِنُوْنَ ﴿١٨٥﴾ مَنْ يُّضْلِلِ اللّٰهُ فَلَا هَادِيَ لَهٗ ؕ وَ
يَذَرُهُمْ فِيْ طُغْيَانِهِمْ يَعْمَهُوْنَ ﴿١٨٦﴾ يَسْـَٔلُوْنَكَ عَنِ السَّاعَةِ اَيَّانَ
مُرْسٰىهَا ؕ قُلْ اِنَّمَا عِلْمُهَا عِنْدَ رَبِّيْ ۚ لَا يُجَلِّيْهَا لِوَقْتِهَآ اِلَّا هُوَ ۘ ثَقُلَتْ وقف لازم وقف منزل
فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ لَا تَاْتِيْكُمْ اِلَّا بَغْتَةً ؕ يَسْـَٔلُوْنَكَ كَاَنَّكَ حَفِيٌّ
عَنْهَا ؕ قُلْ اِنَّمَا عِلْمُهَا عِنْدَ اللّٰهِ وَلٰكِنَّ اَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ ﴿١٨٧﴾

179. திட்டமாக ஜின்களிலும், மனிதர்களிலும் அநேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம்; (அவர்கள் எத்தகையோரென்றால்,) அவர்களுக்கு இதயங்களிருக்கின்றன; அவற்றைக் கொண்டு (நல்லவற்றை) அவர்கள் விளங்கிக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு கண்களுமுண்டு; (எனினும்) அவற்றைக் கொண்டு (இவ்வுலகிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்கமாட்டார்கள்; அவர்களுக்குக் காதுகளுமுண்டு; அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லவற்றை ச்) செவியேற்கமாட்டார்கள்; அவர்கள்கால் நடைகளைப் போன்றவர்கள்; ஏன் (அவற்றைவிட) அவர்கள்மிக அதிகமாக வழிகெட்டவர்கள்; அவர்களேதாம், (நம் வசனங்களை அலட்சியம் செய்து) பராமுகமானவர்களாவர்.

180. இன்னும், அல்லாஹ்வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன; ஆகவே, அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள்; அவனுடைய பெயர்களில் (தவறான பொருள் கொண்டு) திரித்துக்கூறுவோரை விட்டுவிடுங்கள்;அவர்கள் செய்துகொண்டிருந்தவைக்குரிய கூலியைக் கொடுக்கப் படுவார்கள்.(12)

181. மேலும், நாம் படைத்தவர்களில் ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள்; அவர்கள் உண்மைக்கு வழி காட்டுகிறார்கள்; (அதைப் பின்பற்றுவதுடன், மற்ற மனிதர்களுக்கும் அறிவித்து) அதனைக் கொண்டே நீதியும் செய்கின்றனர்.

182. இன்னும், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களே அத்தகையோர் _ (அவர்களுக்கு சகலத்தையும் கொடுத்து) அவர்கள் உணர்ந்து கொள்ளாத விதத்தில், அவர்களை நாம் படிப்படியாக (கீழ்நிலைக்கு இறக்கி) ப் பிடித்துவிடுவோம்.

183. அன்றியும், (இவ்வுலகில்) நான் அவர்களுக்கு அவகாசம் கொடுப்பேன்; நிச்சயமாக என்னுடைய சதி(த் திட்டம்) மிக்க உறுதியானது.

184. (நம் நபியாகிய) அவர்களுடைய தோழருக்கு எவ்விதப் பைத்தியமும் இல்லை என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? அவர் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றவரே தவிர வேறில்லை.

185. இன்னும் வானங்களுடையவும், பூமியுடையவும் ஆட்சியிலும், எப்பொருளிலிருந்தும், அல்லாஹ் படைத்திருக்கின்றவற்றிலும், இன்னும், அவர்களுடைய (மரண) தவணை நெருங்கியதாக ஆகி இருக்கக் கூடும் என்பதிலும் அவர்கள் (உணர்ந்து) பார்க்கவில்லையா? (குர்ஆனாகிய) இதற்குப் பின்னர், எந்தச் செய்தியைத்தான் அவர்கள் விசுவாசங்கொள்ளப் போகிறார்கள்?

186. எவரை அல்லாஹ் தவறான வழியில் செலுத்திவிடுகிறானோ அவரை நேரான வழியில் செலுத்துபவர் எவரும் இலர். தங்கள் வழிகேட்டிலேயே அவர்களை தட்டழிகிறவர்களாக அவன் விட்டும்விடுகின்றான்.

187. (நபியே!) மறுமை நாள் பற்றி_ அதனுடைய வருகை எப்பொழுது என_அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்; (அதற்கு) நீர் கூறுவீராக: அதன் அறிவெல்லாம் என் இரட்சகனிடத்தில்தான்; அதை (வரவேண்டிய) அதற்குரிய நேரத்தில் அவனையன்றி வேறு எவரும் வெளிப்படுத்தமாட்டார்; (அதுபற்றி முற்றிலும் அறிந்தவன் அவனே! அதுசமயம்) வானங்களிலும், பூமியிலும் பளு(வான சம்பவங்கள்) ஏற்பட்டுவிடும்; திடீரெனவே தவிர அது உங்களிடம் வராது; நிச்சயமாக நீர் அதனை முற்றிலும் அறிந்துகொண்டவர் போல் (அதனைப்பற்றி) உம்மிடம் கேட்கிறார்கள்; (அதற்கு) "அதன் அறிவெல்லாம் அல்லாஹ்விடத்தில்தான் இருக்கிறது; எனினும், மனிதர்களில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

قُلْ لَّآ اَمْلِكُ لِنَفْسِىْ نَفْعًا وَّلَا ضَرًّا اِلَّا مَا شَآءَ اللّٰهُ ؕ وَلَوْ
كُنْتُ اَعْلَمُ الْغَيْبَ لَاسْتَكْثَرْتُ مِنَ الْخَيْرِ ۛۚ وَمَا مَسَّنِىَ
السُّوْٓءُ ۛۚ اِنْ اَنَا اِلَّا نَذِيْرٌ وَّبَشِيْرٌ لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ﴿۱۸۸﴾ ع هُوَ الَّذِىْ
خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّجَعَلَ مِنْهَا زَوْجَهَا لِيَسْكُنَ اِلَيْهَا ۚ
فَلَمَّا تَغَشّٰٮهَا حَمَلَتْ حَمْلًا خَفِيْفًا فَمَرَّتْ بِهٖ ۚ فَلَمَّآ اَثْقَلَتْ
دَّعَوَا اللّٰهَ رَبَّهُمَا لَئِنْ اٰتَيْتَنَا صَالِحًا لَّنَكُوْنَنَّ مِنَ الشّٰكِرِيْنَ ﴿۱۸۹﴾
فَلَمَّآ اٰتٰٮهُمَا صَالِحًا جَعَلَا لَهٗ شُرَكَآءَ فِيْمَآ اٰتٰٮهُمَا ۚ فَتَعٰلَى اللّٰهُ
عَمَّا يُشْرِكُوْنَ ﴿۱۹۰﴾ اَيُشْرِكُوْنَ مَا لَا يَخْلُقُ شَيْئًا وَّهُمْ يُخْلَقُوْنَ ﴿۱۹۱﴾ ۖ ج
وَلَا يَسْتَطِيْعُوْنَ لَهُمْ نَصْرًا وَّلَاۤ اَنْفُسَهُمْ يَنْصُرُوْنَ ﴿۱۹۲﴾ وَاِنْ
تَدْعُوْهُمْ اِلَى الْهُدٰى لَا يَتَّبِعُوْكُمْ ؕ سَوَآءٌ عَلَيْكُمْ اَدَعَوْتُمُوْهُمْ
اَمْ اَنْتُمْ صَامِتُوْنَ ﴿۱۹۳﴾ اِنَّ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ
عِبَادٌ اَمْثَالُكُمْ فَادْعُوْهُمْ فَلْيَسْتَجِيْبُوْا لَكُمْ اِنْ كُنْتُمْ
صٰدِقِيْنَ ﴿۱۹۴﴾ اَلَهُمْ اَرْجُلٌ يَّمْشُوْنَ بِهَآ اَمْ لَهُمْ اَيْدٍ يَّبْطِشُوْنَ
بِهَآ اَمْ لَهُمْ اَعْيُنٌ يُّبْصِرُوْنَ بِهَآ اَمْ لَهُمْ اٰذَانٌ يَّسْمَعُوْنَ
بِهَا ؕ قُلِ ادْعُوْا شُرَكَآءَكُمْ ثُمَّ كِيْدُوْنِ فَلَا تُنْظِرُوْنِ ﴿۱۹۵﴾

ع ۲۳ منزل ۸ ۱۳ عند المتأخرين ۱۲

188. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ் நாடியதைத் தவிர எனக்கே எவ்வித நன்மை(யைச் செய்வதற்)கும், தீமை(யைத் தடுத்துக் கொள்வதற்)கும் நான் சக்தி பெறமாட்டேன்; மறைவானவற்றை நான் அறிந்தவனாக இருந்திருந்தால், நன்மைகளையே அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; தீமை என்னைத்தொட்டிருக்காது; நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், விசுவாசங்கொண்ட சமுதாயத்தினருக்கு நன்மாராயங் கூறுபவனுமேயன்றி வேறில்லை".

189. அவன் எத்தகையவனென்றால், ஒரே ஆத்மாவிலிருந்து உங்களைப் படைத்து, அதிலிருந்து அதற்குரிய ஜோடி(யான மனைவி)யை அவளுடன் கூடி வசிப்பதற்காகவும் உண்டாக்கினான். அவளை அவர் மூடிக்கொண்டபோது, அவள் இலேசான சுமை சுமந்தாள்; பின்னர் அதனை(ச் சுமந்து)க்கொண்டு திரிந்தாள்; அது கனமானபோது, "நீ எங்களுக்கு(சந்ததியில்) நல்லதை அளித்தால், நிச்சயமாக நாங்கள் (உனக்கு) நன்றி செலுத்துவோரில் இருப்போம்" என்று அவ்விருவருடைய இரட்சகனாகிய அல்லாஹ்விடம் அவ்விருவரும் பிரார்த்தித்தார்கள்.

190. அவ்விருவருக்கும் நல்ல(சந்ததியான)தை அவன் கொடுத்தபோது, அவர்களுக்கு அவன் கொடுத்தவற்றில் அவ்விருவரும் இணையாளர்களை ஆக்கினார்கள்; அவர்கள் இணைவைப்பதை விட்டும் அல்லாஹ் உயர்வானவன்.

191. எப்பொருளையும் படைக்காதவற்றை அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணையாக்குகின்றனரா? அவர்களும் (அவனால்) படைக்கப்பட்டவர்களே!

192. மேலும், அவர்கள் இவர்களுக்கு எத்தகைய உதவி செய்யச்சக்தி பெற மாட்டார்கள்; தங்களுக்குத்தாங்களே (ஏதும்) உதவி செய்து கொள்ளவும்(சக்தி பெற) மாட்டார்கள்.

193. நீங்கள் அவர்களை நேர் வழியின்பால் அழைத்தபோதிலும் உங்களை அவர்கள் பின்பற்றமாட்டார்கள்; நீங்கள் அவர்களை அழைப்பதும் அல்லது அழைக்காது வாய்மூடிக்கொண்டவர்களாக இருப்பதும் உங்களுக்குச் சமமேயாகும்.

194. நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர, நீங்கள் (தெய்வங்களென) அழைக்கின்றீர்களே அத்தகையவர்கள் உங்களைப் போன்ற அடியார்களே; (உங்களுக்குப்பயனளிப்பார்கள் என்ற கூற்றில்,) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், அவர்களை நீங்கள் அழைத்துப் பாருங்கள்; உங்களுக்கு அவர்கள் பதிலளிக்கட்டும்.

195. (இணை வைப்போரே! நீங்கள் வணங்கும்)அவர்களுக்கு எவற்றைக்கொண்டு அவர்கள் நடப்பார்களோ அத்தகைய கால்கள் உண்டா ?அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் பிடிப்பார்களோ அத்தகைய கைகள் அவர்களுக்கு உண்டா? அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் பார்ப்பார்களோ அத்தகைய கண்கள் அவர்களுக்கு உண்டா ? அல்லது எவற்றைக்கொண்டு அவர்கள் செவியுறுவார்களோ அத்தகைய செவிகள் அவர்களுக்கு உண்டா ? (அவ்வாறாயின்) "நீங்கள் உங்களுடைய இணையாளர்களை அழையுங்கள் ; பிறகு, (எனக்கு இடையூறு செய்ய) சூழ்ச்சி செய்யுங்கள்; (இதில்) நீங்கள் சிறிதும் எனக்கு அவகாசம் கொடுக்கவேண்டாம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

اِنَّ وَلِیِّۦَ اللّٰهُ الَّذِیۡ نَزَّلَ الۡکِتٰبَ ۖۗ وَهُوَ یَتَوَلَّی الصّٰلِحِیۡنَ ﴿۱۹۶﴾
وَالَّذِیۡنَ تَدۡعُوۡنَ مِنۡ دُوۡنِهٖ لَا یَسۡتَطِیۡعُوۡنَ نَصۡرَکُمۡ وَلَاۤ
اَنۡفُسَهُمۡ یَنۡصُرُوۡنَ ﴿۱۹۷﴾ وَاِنۡ تَدۡعُوۡهُمۡ اِلَی الۡهُدٰی لَا یَسۡمَعُوۡا ؕ
وَتَرٰىهُمۡ یَنۡظُرُوۡنَ اِلَیۡکَ وَهُمۡ لَا یُبۡصِرُوۡنَ ﴿۱۹۸﴾ خُذِ الۡعَفۡوَ وَاۡمُرۡ
بِالۡعُرۡفِ وَاَعۡرِضۡ عَنِ الۡجٰهِلِیۡنَ ﴿۱۹۹﴾ وَاِمَّا یَنۡزَغَنَّکَ مِنَ
الشَّیۡطٰنِ نَزۡغٌ فَاسۡتَعِذۡ بِاللّٰهِ ؕ اِنَّهٗ سَمِیۡعٌ عَلِیۡمٌ ﴿۲۰۰﴾ اِنَّ الَّذِیۡنَ
اتَّقَوۡا اِذَا مَسَّهُمۡ طٰٓئِفٌ مِّنَ الشَّیۡطٰنِ تَذَکَّرُوۡا فَاِذَا هُمۡ
مُّبۡصِرُوۡنَ ﴿۲۰۱﴾ ۚ وَاِخۡوَانُهُمۡ یَمُدُّوۡنَهُمۡ فِی الۡغَیِّ ثُمَّ لَا یُقۡصِرُوۡنَ ﴿۲۰۲﴾
وَاِذَا لَمۡ تَاۡتِهِمۡ بِاٰیَةٍ قَالُوۡا لَوۡلَا اجۡتَبَیۡتَهَا ؕ قُلۡ اِنَّمَاۤ اَتَّبِعُ
مَا یُوۡحٰۤی اِلَیَّ مِنۡ رَّبِّیۡ ۚ هٰذَا بَصَآئِرُ مِنۡ رَّبِّکُمۡ وَهُدًی وَّ
رَحۡمَةٌ لِّقَوۡمٍ یُّؤۡمِنُوۡنَ ﴿۲۰۳﴾ وَاِذَا قُرِیَٔ الۡقُرۡاٰنُ فَاسۡتَمِعُوۡا
لَهٗ وَاَنۡصِتُوۡا لَعَلَّکُمۡ تُرۡحَمُوۡنَ ﴿۲۰۴﴾ وَاذۡکُرۡ رَّبَّکَ فِیۡ نَفۡسِکَ
تَضَرُّعًا وَّخِیۡفَةً وَّدُوۡنَ الۡجَهۡرِ مِنَ الۡقَوۡلِ بِالۡغُدُوِّ
وَالۡاٰصَالِ وَلَا تَکُنۡ مِّنَ الۡغٰفِلِیۡنَ ﴿۲۰۵﴾ اِنَّ الَّذِیۡنَ عِنۡدَ رَبِّکَ
لَا یَسۡتَکۡبِرُوۡنَ عَنۡ عِبَادَتِهٖ وَیُسَبِّحُوۡنَهٗ وَلَهٗ یَسۡجُدُوۡنَ ۩ ﴿۲۰۶﴾ ع ۲۴ / ۱۸ السجدة ۱ النصف

196. நிச்சயமாக இவ்வேதத்தை இறக்கிவைத்தவனாகிய அல்லாஹ்தான் என் பாதுகாவலன்; மேலும் அவனே நல்லடியார்களைப் பாதுகாக்கின்றான்.

197. (இணைவைத்து வணங்குவோரே!) அவனையன்றி நீங்கள் அழைக்கின்றீர்களே அத்தகையோர், உங்களுக்கு உதவி செய்ய சக்தி பெறமாட்டார்கள்; தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளவும் மாட்டார்கள்.

198. நீங்கள் அவர்களை நேர்வழியின் பக்கம் அழைப்பீர்களானாலும், அதை அவர்கள் கேட்கமாட்டார்கள்; (நபியே!) மேலும் அவர்களை உம்பால் அவர்கள் பார்ப்பதாக நீர் காண்பீர் (ஆனால்) அவர்களோ (உண்மையில் உம்மைப்) பார்ப்பதில்லை.

199. (நபியே!) நீர் மன்னிப்பை எடுத்துக்கொள்வீராக! நன்மையை ஏவியும் வருவீராக! அறிவீனர்களைப் புறக்கணித்தும் விடுவீராக!

200. ஷைத்தானிலிருந்து ஓர் (சிறிய) ஊசாட்டம் உமக்கு நிச்சயமாக ஊசாடுமானால் அல்லாஹ்வைக் கொண்டு நீர் காவல் தேடிக்கொள்வீராக! நிச்சயமாக அவன் செவியுறுகிறவன், (யாவையும்) நன்கறிகிறவன்.

201. நிச்சயமாக (அல்லாஹ்வுக்குப்) பயப்படுகிறார்களே அத்தகையோர் _ அவர்களை ஷைத்தானுடைய (தவறான) எண்ணம் தொட்டால், அவர்கள் (அல்லாஹ்வை) நினைவு கூறிவிடுவார்கள்; அது சமயம் அவர்கள் (கண் திறந்து) விழிப்படைந்தவர்கள் (ஆவர்).

202. இன்னும், (ஷைத்தான்களாகிய) அவர்களின் சகோதரர்களோ, அவர்களை வழிகேட்டில் இழுத்துச் செல்வார்கள்; பின்னர் யாதொரு குறைவும் செய்யமாட்டார்கள்.

203. மேலும், யாதொரு வசனத்தை நீர் அவர்களிடம் கொண்டுவராவிடில், அதனை நீர் (உம்புறத்திலிருந்தே) தேர்ந்தெடுத்திருக்கக் கூடாதா? என்று (பரிகாசமாகக்) கூறுகின்றனர்; அதற்கு (நபியே) நீர் கூறும்: "நான் பின்பற்றுவதெல்லாம் என் இரட்சகனால் எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டவைகளைத்தான்"; இது உங்கள் இரட்சகனால் (உங்களுக்கு) அளிக்கப்பட்ட அறிவொளிகளாகவும், விசுவாசங்கொண்ட சமூகத்தார்க்கு நேர் வழியாகவும், (அல்லாஹ்வின்) அருளாகவும் இருக்கின்றது.

204. இன்னும் (மனிதர்களே!) குர்ஆன் ஓதப்பட்டால் அதனை நீங்கள் செவிதாழ்த்திக் கேளுங்கள்; வாய்பொத்தியும் இருங்கள்; (அதனால்) நீங்கள் அருள் செய்யப்படலாம்.

205. (நபியே!) உம் மனதிற்குள் மிக்க பணிவோடும், பயத்தோடும் (மெதுவாக) சொல்லில் உரத்த சப்தமின்றியும், காலையிலும், மாலையிலும் உமதிரட்சகனை நினைவுகூர்வீராக! (அவனை) மறந்திருப்போரில் நீர் ஆகியும் விடாதீர்.

206. நிச்சயமாக உமதிரட்சகனிடத்தில் இருக்கின்றார்களே அத்தகையவர்கள், அவனை வணங்குவதில் இறுமாப்புக் கொள்ளமாட்டார்கள். இன்னும், அவனை (எப்பொழுதும்) துதி செய்துகொண்டும், அவனுக்குச் சிரம்பணிந்து (வணங்கிக்) கொண்டும் இருப்பர்.